விலை: 30.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 016 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (04.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ‘ஒமிக்ரோன்’ வைரஸ் திரிபு
# சமூகப் பரவலை ஆரம்பித்துள்ளது
### விசேட வைத்திய நிபுணர் நதீக ஜனகே



(கொழும்பு) இலங்கையில் கொரோனா வைரஸின் “ஒமிக்ரோன்” மாறுபாடு சமூகப் பரவலடைய ஆரம்பித்துள்ளது என மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் விசேட வைத்திய நிபுணர் நதீக ஜனகே எச்சரித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில் விபத்து; நேரக்கணிப்பாளர் மரணம்

(கரணவாய்)

விபத்து சம்பவம் ஒன்றில் இடையில் அகப்பட்ட தனியார் சிற்றூர்தி நேரக்கணிப்பாளர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் நெல்லியடி பஸ் நிலையத்தில் தனியார் சிற்றூர்தி நேரக் கணிப்பாளராக கடமையாற்றிவரும் கரவெட்டி 15

### பொன்னாலையில்
## விபரீத முடிவெடுத்த இளம் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயத்திற்கு அருகாமையில் வசிக்கும் குடும்பப் பெண் 15

### எந்தநேரத்திலும்
# அமைச்சரவை மாற்றப்படலாம்
### அமைச்சர் தினேஷ்



(கொழும்பு)

எந்தநேரத்திலும் அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள் செய்யப்படலாம் என அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரச தலைவருக்கு அதற்கான அதிகாரமும் இயலுமையும் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## குருநகரில் கத்திக்குத்து 3 இளைஞர்கள் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் இளைஞர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கத்திக்குத்தில் முடிந்ததில், மூன்று இளைஞர்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-33)

## தனியாரின் சம்பளத்தை அதிகரிக்க கலந்துரையாடல்
### அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

தனியார் துறையினரின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுவதாக தொழிற் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். 15

## கொரோனா 18 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 18 கோவிட்-19 மரணங்கள் பதிவாகியுள்ளன. 15

## தமிழ் பேசும் கட்சிகள் முஸ்லிம் தரப்பை புறக்கணிக்கின்றன
### பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரிஸ்

(கொழும்பு)

தமிழ் பேசும் கட்சிகள் முஸ்லிம் தரப்பை புறக்கணிக்கின்றன.

தற்போது தமிழ் பேசும் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல் அது தொடர்பில் கையாளப்படும் ஆவ ணங்கள் கூட எமக்கு காண்பிக்கப்படவில்லை என 15

### வவுனியாவில்
## காஸ் அடுப்பு வெடித்து சிதறியது

(வவுனியா)

வவுனியாவில் காஸ் அடுப்பு ஒன்று 15

### யாழ்.போதனாவில்
## மலேரியா நோயாளி ஒருவர் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயாளி ஒருவர் நேற்று திங்கட்கிழமை இனங்காணப்பட்டுள்ளார். 15

### இலத்திரனியல்
## அடையாள அட்டை அறிமுகம்

(கொழும்பு)

இலங்கையில் 15 வயதிற்கு மேற்பட்ட சகல இளைஞர் மற்றும் 15

### அரச ஊழியர்களுக்கு
## மேலதிக கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாய்

(கொழும்பு)

ஜனவரி மாதம் முதல் சமுர்த்தி பெறுவோரின் 3,500 மாதாந்த கொடுப்பனவுக்கு 1000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தாயின் மடியில்
23 – 09 – 1991



காலன் பிடியில்
29 – 12 – 2021

# திரு. செல்வராசா சிறீபிரகாஷ்

## ( அவுஸ்ரேலியா )

யாழ்ப்பாணம் தென்மராட்சி வரணியைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவரும் அவுஸ்ரேலியாவை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா சிறீபிரகாஷ் அவர்கள் கடந்த 29.12.2021 (புதன்கிழமை) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னார் செல்வராசா (வரணி) - புனிதவதி (அவுஸ்ரேலியா) தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் சிறீதரன் (லண்டன்), சிறீபாஸ்கரன் (கொழும்பு), காலஞ்சென்ற சிறீரூபன், சிறீதா (அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கிருஷ்ணவாணி (லண்டன்), நோனா (கொழும்பு), சுரேஸ் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சஞ்சீவன், ஜெனஜீவன், துஷாந்தினி, அஜீவன் (லண்டன்), ஃபாகிரா, சபுஹான், ஷார்பாஹான், ஷாஜாவுத், ஷரஃபுத், ஃபரஹத் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்பு மொழி பேசி பண்புடன் வாழ்ந்து
ஆதரவாய் எமக்கெல்லாம் ஆருயிராய் இருந்து
இன்முகத்தோடு அனைவரையும் ஆதரித்து
ஈன்றவர் மனம் குளிர இரண்டறக் கலந்தவனே!

உன்னத உழைப்பால் உயர்ந்து நின்றாய்
ஊக்கம் திறமை யாவையும் தன்னகத்தே வைத்தாய்
எங்கும் எதிலும் ஏற்றம் கண்டாய்
ஏணி போல் எமக்கெல்லாம் உதவியாயிருந்தாய்

ஐயா! எம் செல்வமே பிரகாஷ் எங்கு சென்றாய்?
ஒன்றாய் கூடியிருந்து குதூகலித்த கிளியே
ஒன்றுமே கூறாது எங்கு நீ பறந்தாய்?
ஒவென்று கதறியழும் உன் பாசப் பிறவிகளை மறந்தாயோ?

ஐயகோ! காலனவன் உன்னுயிரைக் கடுகதியில் பறித்தானோ?
கங்கையவளும் உன்னைக் கவர்ந்து காவு கொண்டாளோ?
காரணத்தை நாமறியோம் கதிகலங்குகின்றோம்.
காலனவன் செய்த சதியதால் - நாம்
பாலன் பிரகாஷை இழந்து துடிக்கின்றோம்
பாவிகளானோம் நாமெல்லாம்
ஏதிலிகள் போல் ஏங்கித் தவிக்கின்றோம் பாரிலே
நீ சென்ற வழிதேடி அலையும் எங்கள் விழிநீர்க்கு
விடை சொல்லி வாராய் எம் செல்வமே!
உம் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.

(9382)

சுரேஸ் (மைத்துனர் - அவுஸ்ரேலியா) : 061431598471
சிறீதரன் - சிறி ( சகோதரன் - லண்டன் ) : 00447950175134
சிறீபாஸ்கரன் - பாசன் (சகோதரன் - கொழும்பு ) : 077 791 9955

தகவல் :-
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை வீட்டிற்கு அனுப்ப அனைவரும் அணி திரள்வோம்

## ஐக்கிய தேசியக் கட்சி அழைப்பு

(கொழும்பு)

**ராஜபக்ஷ அரசாங்கத்தை துரத்தி அடித்து நாட்டை கட்டியெழுப்புவதற்காக எதிர்க்கட்சியினர் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.**



ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், 2021 ஆம் ஆண்டு நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், சமூகம் என அனைத்து துறைகளும் பாரிய கஷ்ட நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தன. அதே நிலையிலேயே புதிய வருடம் பிறந்திருக்கிறது. அதனால் இந்த வருடமும் பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்படும் நிலையே இருக்கிறது.

ஏனெனில் நாட்டில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. எரிவாயு, பால்மா மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வரிசையில் இருக்கவேண்டிய நிலையே தொடர்கிறது.

அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்திடம் டொலர் இல்லை. அதனால் பங்களாதேஷிடம் கடன் வாங்கிய இந்த அரசாங்கம் அடுத்த கட்டமாக ஆப்கானிஸ்தானிடம் கடன் வாங்கும் நிலையே இருக்கிறது.

அதனால் 2022 ஆம் ஆண்டும் மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்கு கஷ்டப்படவேண்டிய ஆண்டாகவே அமையும்.

எனவே இந்த அரசாங்கத்தை துரத்தியடித்து, ராஜபக்ஷ ரெஜிமென்டில் இருந்து நாட்டை பாதுகாக்க, நாட்டை நேசிக்கும் அனைவரும் ஒன்றுபடவேண்டிய காலம் வந்துள்ளது.

அதற்கு அனைவரும் எம்முடன் அணிதிரள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

## தீப்பந்தங்களுடன் வீதிக்கு வந்த மக்கள்



(அம்பாறை)

நாட்டில் தற்போது ஏற்பட்டு வரும் பொருளாதார வீழ்ச்சி, உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் பொருட்களின் தட்டுப்பாடுகள் போன்றவற்றைக் கண்டித்து அரசாங்கத்திற்கு எதிராக நேற்று முன்தினம் இரவு பொத்துவில் அறுகம்பையில் தீப்பந்தங்களை கைகளில் ஏந்தி ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (நி-5)

## மண்ணெண்ணெய்க்காக காத்திருக்கும் மக்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயுவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், மக்கள் மாற்று வழிகளை கையாண்டு மண்ணெண்ணெய் அடுப்புகளை பயன்படுத்தி தமது அன்றாட தேவைகளை பூர்த்தி செய்கின்றனர்.

இதனால் மண்ணெண்ணெய்க்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் தலைநகர் கொழும்பில் கொட்டாஞ்சேனை பகுதியில் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முன்பாக மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்வதற்காக பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (நி-5)

## பாராளுமன்றத்தை உடன் கூட்டுங்கள் அரசிடம் கிரியெல்ல வலியுறுத்து

(கொழும்பு)

பாராளுமன்றத்தை அரசு உடனடியாகக் கூட்ட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பாராளுமன்றத்தை மூடாமல் கூட்டத் தொடரை நடத்துவதே அவசியம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எனவே, பாராளுமன்றத்தை உடன் கூட்டுமாறு அனைத்து எம்.பிக்களும் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் இந்த விடயத்தில் சபாநாயகர் மௌனம் காக்கக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## C யில் இருந்து A யாக மாறிய பரீட்சைப் பெறுபேறு

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியிருந்த நிலையில்,கண்டி மாணவன் ஒருவனின் பெறுபேறு C யில் இருந்து A யாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் சமூக வலைத் தளங்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

உயர்தரப் பரீட்சைக்கு கணித பாடத்தில் தோற்றிய கண்டி தர்மராஜா கல்லூரியின் மாணவன் ருச்சிர நிசங்க அபேவர்தன அந்த பாடத்தில் C சித்தி பெற்றிருந்தார்.

அத்துடன் வேதியியல் மற்றும் இயற்பியல் பாடங்களில் அவர் A தேர்ச்சி பெற்றிருந்தார்.

அதனடிப்படையில், குறித்த மாணவனின் Z மதிப்பெண் 2.0084 ஆகவும், மாவட்ட மதிப்பீடு 68 ஆகவும், தேசியத்தில் 966 ஆகவும் இருந்தது.

இந்நிலையில் மீள் மதிப்பீட்டின் ஊடாக அவரது கணித பாட பெறுபேறு C யில் இருந்து A ஆக மாறியதை அடுத்து குறித்த மாணவனின் Z மதிப்பெண் 2.5538 ஆகவும், மாவட்ட மதிப்பீடு 12 ஆகவும், தேசியத்தில் 124 ஆகவும் மாறியுள்ளது. இம்முறை 3,329 பெறுபேறுகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (நி-5)

## சிட்னியில் உள்ள இலங்கை துணைத்தூதரகத்திற்கு பூட்டு

(சிட்னி)

கொவிட்-19 அச்சம் காரணமாக சிட்னியில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சிட்னியில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தின் அலுவலக வளாகத்தில் அடையாளம் காணப்பட்ட கொவிட்-19 தொற்று காரணமாக நாளை வரை தூதரகம் மூடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலகட்டத்தில் அலுவலகத்தில் தொற்று நீக்கம் செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனால் நாளை மறுதினம் முதல் வருகை தருமாறும் தூதரகம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி-5)

## தங்கத்தின் விலை மீண்டும் உயர்வு

(கொழும்பு)

நாட்டில் தங்கத்தின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

உலக சந்தையில் தங்கத்தின் விலை அதிகரிக்கப்பட்டமையை அடுத்து இவ்வாறு இலங்கையிலும் தங்கத்தின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டில் ஒரு பவுண் தங்கம் 5 ஆயிரம் ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 22 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 12 ஆயிரத்து 500 ஆக காணப்படுகின்ற அதேவேளை, 24 கரட் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 500 ஆகக் காணப்படுகின்றது.

மேலும், உலக சந்தையில் ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலை ஆயிரத்து 818 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



2022 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் [illegible] செயலகங்களில் இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தேசியக் கொடி ஏற்ற[illegible] தொடர்ந்து சத்தியப்பிரமாணம் இடம்பெற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

## பொது அறிவித்தல் - 2022

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குள் எமது சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**01 ஆதன வரி செலுத்துதல்**

2022ஆம் ஆண்டிற்கான ஆதன வரியை மானிப்பாய் கிராமம் (ஆனைக்கோட்டை), மானிப்பாய் பட்டினம் (மானிப்பாய்), பண்டத்தரிப்பு கிராமம் (மாதகல்), பண்டத்தரிப்பு பட்டினம் (பண்டத்தரிப்பு) ஆகிய உப அலுவலகங்களில் உரிய காலங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கவும்.

மேலும் ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் ஆண்டுக்கான வரி முழுவதும் செலுத்துவோரிற்கு வருட மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும். ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய வரியை அந்தந்தக் காலாண்டின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோரிற்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும்.

**02 ஆதனப் பெயர் மாற்றம் செய்தல்**

சபை எல்லைக்குள் ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடைமையினைக் கொண்டு, ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற் கொள்ளாதவர்களும் உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதனவகை மாற்றத்தினையும் மேற்கொள்ளவும்.

**03 காணி உப பிரிவிடுதல்**

பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள ஆதனம் ஒன்றை துண்டங்களாக பிரிக்கும் போது உரிய உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு தொடர்புபட்ட ஆவணங்களைச் சமர்ப்பித்து காணி உப பிரிவிடுதலை மேற்கொள்ளவும்.

**04 கட்டிட அனுமதி வழங்கல்**

(1) பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே தங்கள் ஆதனத்தில் கட்டிடங்கள், மதில்கள், எல்லைத் தூண்கள், தொலைத் தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் மேற்கொள்ளல் வேண்டும்.

(2) ஏற்கனவே அனுமதி பெற்று ஒரு வருட காலத்திற்குள் வேலை நிறைவேற்றாத பட்சத்தில் மேலும் கால நீடிப்பு அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

(3) அனுமதி பெற்று கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக சபை உப அலுவலகத் திற்கு ஊடாக விண்ணப்பித்து குடியமர்வுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

(4) சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டிடங்கள், மதில்கள், எல்லைத்தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசல கூடங்கள், குழாய்க் கிணறுகள் என்பவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது திருத்த வேலைகள் செய்தல் என்பன தண்டனைக்குரிய குற்றமாகும்.

**05 வீதி ஒழுங்கைப் பேணல்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து வீதிகளின் (தரவேறுபாடின்றி) இருமருங்கிலும் எல்லை வேலி மற்றும் எல்லைச் சுவருக்கு வெளியே போக்குவரத் திற்கு இடையூறாக நாட்டப்பட்டுள்ள பூ மரக்கன்றுகள் மற்றும் புல்பூண்டுகள், அலங்கார சீமெந்துக் கட்டுகள் போன்றவற்றை அகற்றி துப்பரவாக வைத்திருக் குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அத்துடன் எமது பிரதேசத்தில் அதிகரித்த வாகனப் போக்குவரத்து காரணமாக நெரிசல்கள் அதிகரித்துள்ளது. எனவே விபத்தினைத் தவிர்ப்பதன் நோக்கமாக வீதி ஒழுங்கைப் பேணும் சைகை குறியீட்டுப் பலகை முக்கிய இடங்களில் நிறுவப்பட் டுள்ளன. அவற்றை அனுசரித்து நடக்கும்படி பொதுமக்கள் தயவுடன் வேண்டப் படுகின்றனர். வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது பொலிசாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**06 வியாபார அனுமதிப் பத்திரம் - 2022**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், நடமாடும் வாகன வியாபாரம், முச்சக்கர வண்டித் தரிப்பிட அனுமதி மற்றும் எமது பிரதேசத்திற்குள் பொருட்களை விநியோகிப்போர், தொழிற்சாலைகள் மற்றும் சேவை வழங்குநர்கள் 2022ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை 2022ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்குள் பெற்று அதனை பூரணப்படுத்தி உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022ஆம் திகதிக்குள் செலுத்தி 2022ஆம் ஆண்டுக்குரிய வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**07 இறைச்சி வகைகள், மரக்கறிகள் விற்பனை**

எமது பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட அனைத்து சந்தைகளின் அமைவிடத்திலிருந்தும் 500மீற்றர் சுற்று வட்டார தூரத்திற்குள் இறைச்சி வகைகள், மரக்கறிகள் என்பன விற்பனை செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

**08 துவிச்சக்கர வண்டி மற்றும் மிருக உரிமம்**

2022ஆம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி மற்றும் மிருகங்களின் உரிமத்தை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

**09 சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டத்தின் 26ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 1533/16 இலக்க 2008.01.22ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட வியாபாரம் அல்லது தொழில்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தலைமையலுவலகத்தின் திட்டமிடல் கிளையில் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தினைப் பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகியிருப்பின் அதனைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். வலுவிலுள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிடப்பட்ட தொழில்கள் நடத்தப்படின் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**10 படவரைஞர்களைப் பதிவு செய்தல்**

2022ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு / புதுப்பித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் சபை உப அலுவலகங்களில் அறிந்து கொள்ள முடியும்.

**11 விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் நிர்வாக பிரிவிலுள்ள பொது வீதிகளின் இருமருங்கும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் மற்றும் சுவர்களில் பொருத்தப்படும் அல்லது காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கான கட்டணத்தை 31.01.2022ஆம் திகதிக்கு முன் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**செலுத்த வேண்டிய விளம்பர கட்டணங்கள் விபரம்**

| இல | விபரம் | மூன்று மாதங்களிற்கான கட்டணம் | ஒரு வருடத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| i | கொடி விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 20.00 | 100.00 |
| ii | சுவர் விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| iii | ஒளியூட்டப்படாத விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 50.00 | 75.00 |
| iv | ஒளியூட்டப்பட்ட விளம்பரம் ஒரு சதுர அடிக்கு | 100.00 | 200.00 |

இவ்வாறு அனுமதி பெறப்படாத முகவர்கள் / நிறுவனங்கள் / வர்த்தக நிலைய உரிமையாளர்கள் போன்றோரது சகல விளம்பரங்களும் உரிய நிலையங் களிலிருந்து 01.02.2022ஆம் திகதிக்கு பின் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்

**12 திண்மக் கழிவுகளை அகற்றுதல்**

வீடுகள் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது ஆதனத்தில் நுளம்பு பெருகுவதற்கேதுவான சூழலை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

கழிவுப் பொருட்களை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் அனுமதி யின்றி கொட்டுதல் மற்றும் கொண்டு செல்லல் ஆகியன பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு தடைசெய்யப்பட்டுள்ளன. பொதுமக்கள் தமது நாளாந்த சமையல் கழிவுகளை உரிய வகையில் தரம் பிரித்து பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு கழிவகற்றல் நேர அட்டவணைக்கு அமைவாக வழங்கி சுத்தம் பேணுமாறு வேண்டப்படுகின்றீர்கள். அவ்வாறு அகற்றமுடியாதுள்ள கழிவுப் பொருட்களைத் தரம் பிரித்து, பிரதேச சபை உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு அவற்றினை அகற்றிக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**13 நீர் வழங்கல் சேவை**

பொதுமக்கள் மற்றும் வியாபார நிலையங்கள் அரச தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு குடிநீர் தேவைப்படின் எமது உப பணிமனைகளுடன் தொடர்பு கொண்டு உரிய கட்டணத்தை செலுத்தி குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**14 கனரக வாகன சேவை**

திரவக் கழிவுகள் அகற்றும் வாகனத்தின் (Gully Bowser) சேவை தேவைப்பட்டால் எமது உப அலுவலகங்களில் கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

வீதி உருளை Backhoe Loader என்பன வாடகைக்கு தேவைப்பட்டால் தலைமை அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.

ஏனைய கழிவுகளை பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி கழிவகற்றல் சேவையினைப் பெற்று அகற்றிக் கொள்ளலாம்

**15 கலாசார மண்டபம் மற்றும் விளையாட்டு மைதானம்**

பொதுமக்கள் மற்றும் வியாபார, அரச, தனியார் நிறுவனங்கள் தமது விசேட நிகழ்வுகளிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி மண்டப வசதி மற்றும் விளையாட்டு மைதான இடவசதி என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**16 பொதுப்பயன்பாட்டு சேவைகள்**

சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்கள், ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மற்றும் பாலர் பாடசாலைகள் என்பன பொதுமக்கள் சேவையினை சிறப்பான முறையில் இலவசமாக வழங்கி வருகின்றன. எனவே அச்சேவைகளையும் முழுமையாகப் பெற்று பயனடையுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**17 மயானங்கள்**

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட சுடுகாடுகளில் பூதவுடலினை தகனம் செய்வதற்கான கட்டணமாக ரூபா 1000.00 இனை எமது உப அலுவலங்களில் (வார நாட்களில் உப அலுவலகத்திலும், வார இறுதி, விடுமுறை நாட்களில் உப அலுவலக பொது நூலகத்திலும்) செலுத்தி அனுமதி பெற்று ஈமக் கிரியைகளை மேற்கொள்ளவும்.

பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட இடுகாடுகளில் பூதவுடலினை நல்லடக்கம் செய்பவர்கள் உப அலுவலகங்களில் (வார நாட்களில் உப அலுவலகத்திலும், வார இறுதி, விடுமுறை நாட்களில் உப அலுவலக பொது நூலகத்திலும்) அனுமதியினைப் பெற்று பூதவுடலினை நல்லடக்கம் செய்துகொள்ள முடியும்.

■ இவ் அறிவித்தல்கள் தொடர்பான மேலதிக விபரங்கள், கட்டண விபரங்கள் என்பவற்றை எமது உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**அ. ஜெபநேசன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு**
**பிரதேச சபை,**
**மானிப்பாய்,**
**03.01.2022**

**தொலைபேசி இலக்கங்கள் :**

| | | |
|---|---|---|
| தலைமை அலுவலகம் | - | 021 225 6647 |
| மானிப்பாய் பட்டினம் | - | 021 225 5382 |
| மானிப்பாய் கிராமம் | - | 021 225 5379 |
| பண்டத்தரிப்பு பட்டினம் | - | 021 225 2021 |
| பண்டத்தரிப்பு கிராமம் | - | 021 225 2022 |

(C-3407)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவை மாற்றத்தால் பிரச்சினை தீராது - ஜே.வி.பி

(கொழும்பு)

**அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது என மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.**

நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய தகுதியும் அரசாங்கத்திற்கு இல்லை.

எனவே நாட்டு மக்கள் தற்போதைய அரசாங்கத்தை சிம்மாசனத்திலிருந்து இறக்கி அதன் ஊடாக சிறந்த பாடத்தை புகட்ட வேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைச்சரவையில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. அதனால் நாட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படப் போவதில்லை.

அமைச்சரவை மாற்றம் என்றால் ஏற்கனவே பதவி வகிக்கும் கோமாளிகளே மீண்டும் வேறு அமைச்சுக்களுக்கு மாற்றப்படுவர். இதனால் எவ்வித தீர்வையும் எம்மால் எதிர்பார்க்க முடியாது.

நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்த இந்த அரசாங்கத்திற்கு தகுதி இல்லை. எனவே இவர்களை ஆட்சி அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மக்கள் தயாராக வேண்டும். நாட்டை மேம்படுத்தி மீண்டும் அதனைக் கட்டியெழுப்பக் கூடியவர்களிடம் ஆட்சியைக் கையளிக்க வேண்டும். அதற்கு எம்முடன் கைகோர்க்குமாறு மக்களை கோருகின்றோம்.



தொடர்ந்தும் கடன் பெற்றுக் கொண்டிருக்காமல் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தை சிம்மாசனத்திலிருந்து கீழே இறக்கி மக்கள் அதன் ஊடாக சிறந்த பாடத்தை புகட்ட வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் அறிக்கை வெளியிட்டால் சட்ட நடவடிக்கை

### சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

(கொழும்பு)

ஜனாதிபதியை அவமதிக்கும் வகையில் சமூக ஊடகங்களிலோ அல்லது வேறு ஊடகங்களிலோ அறிக்கைகளை வெளியிடவோ அல்லது பரிமாறிக்கொள்ளவோ முடியாது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவ்வாறு செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## தனது குழந்தைகளை சித்திரவதை செய்த தந்தை கைது

(ஹற்றன்)

தனது இரு குழந்தைகளையும் மரத்தில் கட்டி அவர்கள் மீது மிளகாய்த் தூளை தூவி சித்திரவதை செய்த தந்தையை ஹற்றன் பொலிஸார் கைது செய்தனர்.

6 மற்றும் 7 வயதான சிறுவர்களே இவ்வாறு தந்தையால் தாக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட சிறுவர்கள் சிகிச்சைகளுக்காக டிக்கோயா ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹற்றன் - குடாகம சமகி மாவத்தையைச் சேர்ந்த சிறுவர்களின் தந்தை மதுபோதைக்கு அடிமையானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## தனக்குத் தானே தீ மூட்டிய யாத்திரிகர்

### சிவனொளிபாதமலையில் சம்பவம்

(ஹற்றன்)

சிவனொளிபாதமலைக்கு யாத்திரை சென்ற ஒருவர் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்ட நிலையில், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லதண்ணி பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இதனையடுத்து அவர் உடனடியாக மஸ்கெலியா மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக டிக்கோயா கிளங்கன் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## வாகன விபத்துக்களில் சிக்கி பன்னிருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நேற்று முன்தினம் 24 மணித்தியாலங்களில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நிவித்திகல, கெஸ்பேவ, குருணாகல், பாதெனிய, பதுளை, அட்டாளைச்சேனை உள்ளிட்ட பகுதிகளில் இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. (நி-5)


## கண்ணீர் அஞ்சலி

அமரர். திரு.நாகலிங்கம் அம்பிகைபாகன்

தோற்றம் 11 . 06 . 1942



மறைவு 01 . 01 . 2022

எமது பாடசாலை ஆசிரியர் திரு.செல்வராசா இரேஜேஸ்வரன் அவர்களின் அன்பு மாமனார் அமரர்.திரு.நாகலிங்கம் அம்பிகைபாகன் 01.01.2022 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(9375)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.


## இராசிபலன்

04.01.2022
மார்கழி 20, செவ்வாய்க்கிழமை
துதியை முன்னிரவு 8.50 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 2.03 மணிவரை
சுபநேரம் 11.01-12.31 மணிவரை
இராகுகாலம் 3.31-5.01 மணிவரை

சந்திராஷ்டமம்: மிருகசீரிடம்
திருவாதிரை

வளவன்

**மேஷம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்

**ரிஷபம்**: சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**: ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டிய நாள், சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**கடகம்**: ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**சிம்மம்**: இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கை கூடும், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், கௌரவ மான சம்பவங்கள் இடம்பெறலாம்

**கன்னி**: உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கை கூடும்.

**துலாம்**: வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

**விருச்சிகம்**: வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் ஒத்துழைப்புண்டு.

**தனுசு**: ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.

**மகரம்**: வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்**: சிறிய வேலையொன்றுக்காக அலைய நேரிடலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும், சயன சுகக் குறைவான நாள்.

**மீனம்**: அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலம் தரும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

மற்றவர்களின் இயல்பான குணத்தோடு அவர்களை ஏற்றுக்கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் பட்டத் திருவிழாவிற்கு

# இனப்படுகொலை அரசின் பிரதிநிதிகளை அழைப்பது தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர் முயற்சியே

## தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மண்ணில் இதுவரை காலமும் தமிழர் பண்பாட்டைப் பிரதி பலிக்கும் வகையில், பட்டத் திருவிழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு வந்தது.

ஆனால், வழமைக்கு மாறாக, இவ்வாண்டு தமிழின அழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர் களாக்கி, அவர்களின் பங்கு பற்றலுடன் இவ் விழாவை நடத்த முற்படுவது தமிழின பண்பாட்டு அழிப்பின் தொடர் முயற்சியாகும் என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

அக் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தால் நேற்று வெளி யிடப்பட்ட ஊடக அறிக்கை யிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இப் பட்டத் திருவிழா நிகழ்வு நடைபெறுமாயின், தமிழின வரலாற்றின் கறை படிந்த நிகழ்வாகவே, எதிர்வரும் காலங்களில் இந் நிகழ்வு வர லாற்றில் பதியப்படும். தமிழர் வரலாற்றில் பின்னிப்பிணைந்த பாரம்பரிய நிகழ்வான பட்டத் திருவிழாவில், இவ்வாறான கறை படிந்த வரலாற்றுத் தவறை மேற்கொள்ளத் துணைபோக வேண்டாம் என விழாவின் ஏற்பாட்டாளர்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேண்டி நிற்கின்றது.

தமிழினஅழிப்பு அரசின் பிரதிநிதிகளை விருந்தினர்களாக்க முற்படும் பேரின வாத முகவர்களின் திட்ட மிட்ட சதி வலைக்குள் சிக்காது, ஏற் பாட்டாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

வீரமும் தியாகமும் அளப்பரிய அர்ப்பணிப்புக்களும் நிறைந்த தமிழ் மண்ணில், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காக, ஒரு உன்னதமான தேசிய விடுதலைப் போராட்டம் உதித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மண்ணில், அற்ப நலன்களை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்படும் தீர்மானங்கள் வரலாற்றில் என்றுமே மன்னிக்கப்பட முடியாதவையாகவே இருக்கும் என்பதைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்த விரும்புகின்றது.

எனவே, குறித்த பட்டத் திருவிழாவுக்கு நாட்டின் இனப்படுகொலை அரசின் பங்காளிகளையும் அவர்களுக்குத் துணை நின்றவர்களையும் விருந்தினர்களாக அழைக்கும் முடிவை ஏற்பாட்டாளர்கள் உடன் நிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-5-18-101-104)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2022 ஆம் ஆண்டின் கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை பதில் துணைவேந்தரும், உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதியுமான பேராசிரியர் செல்வம் கண்ணதாசன் தலைமையில் இடம் பெற்றது. (படம்- சிவசாந்தன், கஜிந்தன்)

# ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரை அண்டிய பகுதியில் ஒரு தொகைப் பணம் ஆட்டோ சாரதி ஒருவரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

எனவே பணத்தை தவறவிட்டவர்கள் யாழ்.முனீஸ்வரன் வீதியில் அமைந்துள்ள யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கத்திற்கு சமுகமளித்து உரிய ஆதாரத்தைக் காட்டி பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு சங்க நிர்வாகம் அறிவித்துள்ளது. (4-5)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இடம் பெறும் வாராந்தச் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர் வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் நடைபெறும்.

சைவசித்தாந்தபண்டிதர் சைவப்புலவர் கந்த சத்திய தாசன் " பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானா " என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (4-5)



2022 ஆம் ஆண்டுக்கான கடமைகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று யாழ்.நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன், கஜிந்தன்)

# டிப்பர்- மோ.சைக்கிள் விபத்து ஒருவர் காயம்





(குப்பிழான்)

யாழ்ப்பாணம் செம்மணி வீதியில் நேற்றுத் திங்கட்கிழமை நடந்த டிப்பர்- மோட்டார்ச் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிள் முற்றாக சேதமடைந்துள்ளது. குறித்த சம்பவத்தில் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் எதுவும் ஏற்படாத போதிலும் மோட்டார் சைக்கிள் செலுத்தியவர் சிறு காயங்களுக்குள்ளாகினார்.(4-5-18-33-104)

# தவசிக்குளம் பகுதியில் வெள்ளத்தால் 72 குடும்பங்கள் பாதிப்பு



(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/328 தவசிக்குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அண்மையில் பெய்த கனமழை காரணமாக 20 குடும்பங்கள் முழுமையாகவும் 52 குடும்பங்கள் பகுதியளவிலும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் இவ்விடயம் தொடர்பாக இராணுவத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் இராணுவத்தினர் வாய்க்கால் வெட்டி வெள்ளத்தை அகற்றுவதற்கான முயற்சியில் இரு தினங்களாக ஈடுபட்டு வருவதுடன்-வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உணவுத் தேவைகளையும் இராணுவத்தினர் பூர்த்தி செய்து வருகின்றனர். தவசிக்குளம் மக்கள் வருடாவருடம் வெள்ள இடரினால் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-30)



திருகோணமலையில் கடந்த 02.01.2006 அன்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்களின் 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெற்றது. தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொண்டு படுகொலை செய்யப்பட்ட ஐந்து மாணவர்கள் நினைவாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார். (படம்- ரவீந்திரன்)

# பாலத்தில் வெடிப்பு



(கரணவாய்)

வடமராட்சி முள்ளிப் பகுதியில் உள்ள இரும்புப் பால வீதியில் மீண்டும் வெடிப்பு ஏற்பட்டதன் காரணமாக பாலம் கீழிறங்கி ஆபத்தான நிலையில் உள்ளது.

கடந்த மாதமும் குறித்த பால வீதியில் வெடிப்பு ஏற்பட்டதையடுத்து சீர் செய்யப்பட்டது.

இந் நிலையில் தற்போது மீண்டும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே உரிய தரப்பினர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-5-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியை வீழ்த்தும் புரட்சிக்கு தலைமையேற்கத் தயார்

## மக்கள் விடுதலை முன்னணி



(கொழும்பு)

இந்த ஆட்சியாளர்களை விரட்டியடித்து. ஆட்சியை வீழ்த்த மக்கள் தயார் என்றால், புதிய ஆட்சியை உருவாக்க மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். ஆட்சி மாற்றத்திற்கான புரட்சிக்கும் புதிய ஆட்சிக்கு தலைமையேற்கவும் நாம் தயாராகவே உள்ளோம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் சமூக நெருக்கடி நிலைமைகளில் மக்கள் விடுதலை முன்னணியின் நகர்வுகள் மற்றும் அவர்களின் நிலைப்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நிதி நெருக்கடிக்கும் பொருளாதார வீழ்ச்சிக்கும் இந்த ஆட்சியாளர்களே காரணமாகும். அவர்களின் தொடர்ச்சியான தவறான அரசியல் கொள்கையே நாடு கடன் பொறிக்குள் சிக்கக் காரணமாகும். ஆகவே தற்போதைய ஆட்சியாளர்கள் மற்றும் முன்னாள் ஆட்சியாளர்கள் சகலரும் இதற்குப் பொறுப்புக்கூறியாக வேண்டும்.

எனவே புரட்சியின் மூலமாகவே இந்த நெருக்கடியில் இருந்து மீள முடியும். அது அரசியல் புரட்சியாக அமைய வேண்டும். அதனை ஜனநாயக ரீதியில் முன்னெடுக்க வேண்டும். அதனை முன்னெடுத்துக் கொண்டு செல்ல நாம் தயாராக உள்ளோம்.

ஆகவே தான் சகலரையும் எம்முடன் கைகோர்க்க நாம் அழைப்பு விடுக்கின்றோம். நாட்டில் அவசியமான ஒரு அரசியல் மாற்றத்தை செய்ய வேண்டிய முக்கியமான கால கட்டத்தில் நாம் உள்ளோம். இனியும் இவர்களின் கைகளில் ஆட்சியைக் கொடுத்தால் நாடு முழுமையாக அழிந்து நாசமாகும்.

இந்த ஆட்சியாளர்களை விரட்ட மேலும் மூன்று ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு மக்களால் தாக்குப்பிடிக்கவும் முடியாது.

நாம் மக்களை அராஜகத்தின் பக்கம் திருப்பவில்லை, அவர்களின் உரிமையையை வெற்றிகொள்ளவும், ஜனநாயகத்தையும் நிலைநாட்ட ஜனநாயக ரீதியில் தேர்தல் ஒன்றின் ஊடாக இதனை மாற்றலாம் என்பதே எமது நிலைப்பாடு.

நாட்டில் மூவின மக்களின் ஒற்றுமையில் நாட்டைக் கட்டியெழுப்பினால் மட்டுமே சர்வதேச முதலீடுகளுக்கும் வாய்ப்பு கிடைக்கும். நாட்டை விட்டு வெளியேறிய பலர் இன்று வெளிநாடுகளில் செல்வந்தர்களாக உள்ளனர். அவர்கள் மீண்டும் எமது நாட்டில் முதலீடுகளைச் செய்ய வேண்டும். அதற்கு ஏற்ற சூழலை நாம் உருவாக்கிக்கொடுப்போம் என அவர் தெரிவித்தார். (நி-5)

### ஒக்டோபர் மாதம் வரை

# நாட்டின் மொத்தக்கடன் 14.5 ட்ரில்லியன் ரூபாய்

(கொழும்பு)

நாட்டின் நிதி நெருக்கடி நிலைமையில் தேசிய சவால்களை சமாளிக்க அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள கடன்கள் மூலமாக கடந்த ஆண்டின் ஒன்பது மாதங்களில் நாட்டின் மொத்த கடனானது இரண்டு ட்ரில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கையில் வெளிப்பட்டுள்ளது.

அதற்கமைய கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையில் இலங்கையின் மொத்தக் கடனானது 14.5 ட்ரில்லியன் ரூபாய் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி-5)

# மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் கட்டாயம்

(கொழும்பு)

உள்நாட்டில் தயாரிக்கப்படும் அல்லது இறக்குமதி செய்யப்படும் மதுபானப் போத்தல்களுக்கு புதிய பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒட்டுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மதுபான விற்பனையைத் தடுக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆகவே பழைய மதுபானப் போத்தல்களை விற்பனை செய்து நிறைவு செய்வதற்கு எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்தது. அதன் பின்னர் விற்பனை செய்யப்படும் சகல மதுபானப் போத்தல்களிலும் புதிய முத்திரைகள் காணப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1973 இந்து நட்சத்திரம்:அவிட்டம்
கி.பா:செவ் 1 சூரி 3இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:உயர்தரம் கமம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண் உள்நாடு மட்டும்
தொ.இ: B/12100

பிறப்பு:1980 இந்து நட்சத்திரம்:சித்திரை
கி.பா: 10 செவ் 5 சூரி 4 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Diploma கனடா குடியுரிமை
எதிர்பார்ப்பு:குறைந்தது உயர்தரம்
தொ.இ: B/6005

பிறப்பு:1984 இந்து
நட்சத்திரம்:உத்தரம் 2
கி.பா:08 செவ் 12 சூரி9 இல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: சொந்தத் தொழில் வியாபாரம்
தொ.இ: B/6031

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: விசாகம் 1
கி.பா:18 ¾ செவ் 1 சூரி 9இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்:A/L, Dip. In Mass Media சர்வோதயம், அரச சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: அழகான குடும்பப் பாங்கான பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/9547

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: சதயம்
கி.பா: சூரி, செவ் 8 இல்
உயரம்:4'7"
தகைமை/ தொழில்:. உயர்தரம்
எதிர்பார்ப்பு:சிறு உத்தியோகம் உள்நாடு மட்டும்
தொ.இ:G/7297

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்:சித்திரை
கி.பா:14 ½ செவ் 1 சூரி 10இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:ஆசிரியை
எதிர்பார்ப்பு:அரசதொழில் உள்நாடு மட்டும்
தொ.இ:G/7314

பிறப்பு:1989 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி.பா: செவ் 4 சூரி5 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்:பொது முகாமைத்துவம் (B.Sc) கணக்காளர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ:G/7334

பிறப்பு: 1979 கிறிஸ்தவம் (R.C)
நட்சத்திரம்:அத்தம்
கி.பா: செவ் 2 சூரி 3 இல்
உயரம்:160 cm
தகைமை/ தொழில்: P.H.D. தற்போது வெளிநாட்டில் தொழில் புரிகின்றார் (நோர்வே)
எதிர்பார்ப்பு:உயர்பதவி
தொ.இ:G/7405

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# VACANCY

Lion Engineering and Construction is Looking Vacancy for below position

**1. Quantity Surveyor Assistant**
-HND / NCT in Civil or QS
-Good Communication Skill is expected

**Management Assistant**
-Handling Knowledge of MS Excel and MS Word documents are required
-Good Communication Skill is expected

**Store Keeper**

Send CV: lionengineering9@gmail.com
Please Contact: 077 558 8835
076 200 4827

**Lion Engineering and Constrction**
**No.765 1/5, K.K.S. Road,**
**Jaffna.**
(9576)



## யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி சங்கம் (தலைமையகம்)

### அறிவித்தல்

19.12.2021 இல் நடைபெற்ற வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாகிகள் விபரம்,

1. திரு. அ. டெனிஸ் அவர்கள் - தலைவர்
2. திரு. மா. சிவசுப்பிரமணியம் அவர்கள் - உப தலைவர்
3. திரு. சி. கிரிதரன் அவர்கள் - செயலாளர்
4. திரு. த.வசந்தன் அவர்கள் - உப செயலாளர்
5. திரு. ப.றொபின்றோய் அவர்கள் - பொருளாளர்
6. திருமதி. செ. கோமளேஸ்வரி அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
7. திரு. இ. அசோக்குமார் அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
8. திரு. சி. அன்ரன் லோறன்ஸ் அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
9. திரு. கே. முரளீதரன் அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
10. திரு. ந. விஜயகுமார் அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
11. திரு. ம. இளஞ்செழியன் அவர்கள் - நிர்வாக உறுப்பினர்
12. திரு. பொ. செல்வநாதன் - போசகர்

குறிப்பு: எமது சங்க பழைய (2020), புதிய (2022) நிர்வாக ஒன்றுகூடலும் புதிய நிர்வாகப் பொறுப்பேற்றல் நிகழ்வும் 05.01.2022 காலை 10.00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். (C-3402) நிர்வாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன் நுரையீரலை தாக்குவது குறைவு எலிகள் மீதான பரிசோதனையிலும் உறுதி

(வோஷிங்டன்)

ஒமிக்ரோன் வைரஸ் நுரையீரல் வரை சென்று அதிக பாதிப்புகளை ஏற்படுத்தாததால் அதிக உயிரிழப்புகள் ஏற்படாது என மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர்.


அமெரிக்கா மற்றும் ஜப்பானைச் சேர்ந்த விஞ்ஞானிகள் எலிகள் மீது ஒமிக்ரோன் வைரஸைச் செலுத்தி அதன் பாதிப்பு குறித்த ஆய்வில் ஈடுபட்டனர்.

இந்த ஆய்வில் டெல்டா உள்ளிட்ட ஏனைய திரிபுகளுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் நுரையீரலைத் தாக்குவது குறைவாக உள்ளதாகவும் இதனால் இறப்பு விகிதம் குறைவாக இருப்பதும் கண்டறியப்பட்டது.

கொரோனாவின் பிற உருத்திரிபு வைரஸ்களுடன் ஒப்பிடுகையில் எலிகளின் நுரையீரலில் இருந்த ஒமிக்ரோன் பத்தில் ஒரு மடங்கு குறைவாக இருந்தது என ஆய்வு முடிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஹொங்கொங் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலும் ஏனைய திரிபுகளுடன் ஒப்பிடுகையில் ஒமிக்ரோன் நுரையீரலைத் தாக்குவது குறைவாக இருப்பதாகவும் இதனால் இறப்பு வீதம் குறைவாக இருப்பதாகவும் தகவல் வெளியாகியமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# 3000 லீற்றர் மதுபானத்தை கால்வாயில் கொட்டி வீடியோ வெளியிட்ட தலிபான்கள்



(காபூல்)

3000 லீற்றர் மதுபானத்தை கால்வாயில் கொட்டி அந்த வீடியோவை தலிபான்கள் வெளியிட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் அமெரிக்க, நேட்டோ படைகள் வெளியேறின.

இதனையடுத்து அங்கு ஆட்சியைக் கைப்பற்றியது தலிபான் அமைப்பு. தலிபான்கள் ஆட்சியில் பல்வேறு கெடுபிடிகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இஸ்லாமியா ஷாரியா சட்டத்தின்படியே ஆட்சி நடக்கும் என அவர்கள் ஏற்கனவே அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானின் உளவுத்துறை இயக்குநரகம் சார்பில் ஒரு டுவிட் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த டுவிட்டில் இடம்பெற்றுள்ள வீடியோவில் பெரிய பீப்பாய்களில் இருந்து மதுபானம் கால்வாயில் கொட்டப்படும் காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் முஸ்லிம்கள் மதுபானத்தை தயாரிக்க, விற்க, அருந்தக்கூடாது எனப் பதிவிடப்பட்டிருந்தது.

இந்த ரெய்டு எப்போது நடத்தப்பட்டது என்பது குறித்த தகவல் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

ஆப்கானிஸ்தானில் இதற்கு முன்னதாக இருந்த ஆட்சியின் போதும் மதுபானங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தலிபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் நாடு முழுவதும் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

மேலும், போதைப் பழக்கம் உடையவர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் நடவடிக்கையும் அதிகரித்துள்ளது. (நி-5)

## சீனாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 22 பேர் காயம்

(பீஜிங்)

தென்மேற்கு சீனாவின் யுனான் மாகாணத்தில் உள்ள நிங்லாங் மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட 5.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கத்தினால் குறைந்தது 22 பேர் காயமடைந்துள்ளனர் என சீன செய்தி நிறுவனம் தெரிவித்தது. (நி-5)

# சீன முதலீடுகளுக்கு எதிராக மக்கள் போராட்டம்



(இஸ்லாமாபாத்)

சீனா முதலீடுகள் மற்றும் திட்டங்களினால் எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப் பெறவில்லை. குடிநீர் பிரச்சினைக்குக்கூட தீர்வு வழங்கப்படவில்லை என பாகிஸ்தான் - குவாடர் பகுதிகள் மக்கள் போராட்டம் நடத்தினர்.

குவாடர் உரிமைகளை பாதுகாக்கும் இயக்கம் இந்த போராட்டங்களை முன்னெடுத்தது டன் பிரதமர் இம்ரான் கான் ஆட்சியின் அடக்கு முறைகளுக்கு எதிராகவும் செயற்பட்டு வருகிறது.

அதேபோன்று, இந்த இயக்கம் முன்னெடுத்து வரும் போராட்டங்களின் வெற்றியானது இம்ரான் கான் அரசாங்கத்தின் பாதிப்பை வெளிப்படுத்துவதாக தெற்காசிய ஆய்வுகளுக்கான ஐரோப்பிய மன்றம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# இம்ரான் கானின் முன்னாள் மனைவியின் கார் மீது துப்பாக்கிச் சூடு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் முன்னாள் மனைவி ரெஹாம் கான். நேற்று முன்தினம் இரவு இவர் மருமகனின் திருமண நிகழ்ச்சியில் பங்கேற்றுவிட்டு காரில் வீடு திரும்பிய வேளை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த 2 மர்ம நபர்கள் துப்பாக்கி முனையில் காரை மறித்தனர். பின்னர் அவர்கள் காரை நோக்கி துப்பாக்கியால் சுட்டு தன்னை மிரட்டியதாக ரெஹாம்கான் குற்றம் சாட்டியுள்ளார்.

இம்ரான்கான் ஆட்சியின் கீழ் பாகிஸ்தான் கோழைகள், குண்டர்கள் மற்றும் பேராசைக்காரர்கள் நாடாக மாறி விட்டது' என்று தெரிவித்தார்.

முன்னாள் தொலைக்காட்சி தொகுப்பாளரும், பத்திரிகையாளருமாக இருந்த ரெஹாம்கான் கடந்த 2014ம் ஆண்டு இம்ரான்கானை திருமணம் செய்தார். அடுத்த ஆண்டு அவர்கள் பிரிந்து விட்டனர்.

தற்போது 48 வயதான அவர் தனது முன்னாள் கணவரான பிரதமர் இம்ரான் கானை தொடர்ந்து விமர்சனம் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து பதவி விலகினார் சூடான் பிரதமர்





(கார்டூம்)

மக்களின் கடும் எதிர்ப்புப் போராட்டங்களை அடுத்து சூடான் பிரதமர் அப்தல்லா ஹம்டோக் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பதவி விலகினார்.

இராணுவத்துடன் செய்து கொண்ட சர்ச்சைக்குரிய ஒப்பந்தத்தின் பிரகாரம் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்ட சில வாரங்களிலேயே அவரது பதவி விலகல் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடந்த ஒக்டோபரில் சதிப் புரட்சி மூலம் சூடானில் இராணுவம் ஆட்சி-அதிகாரத்தைக் கைப் பற்றியது. தொடர்ந்து ஹம் டோக் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.

ஆனால் இரா ணுவத்துடன் செய்துகொண்ட அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து அவர் மீண்டும் பதவியில் அமர்த்தப்பட்டார்.

எனினும் இராணுவத்துடன் செய்துகொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு ஒப்பந்தத்தை முற்றாக நிராகரித்து அங்கு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்நிலையில் தனது பதவி விலகல் முடிவை அப்தல்லா ஹம்டோக் அறிவித்தார். அவர் பதவி விலகிய நாளன்று இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டங்களின் போதும் இருவர் கொல்லப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (நி-5)

# புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது பிரான்ஸில் 874 கார்கள் தீவைத்து எரிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸில் புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது மொத்தம் 874 கார்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2019 ஆம் ஆண்டில் மொத்தம் ஆயிரத்து 316 கார்கள் தீவைத்து எரிக்கப்பட்டதாகவும் அதனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு இவ்வாறான சம்பவங்கள் குறைந்துள்ளதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர்.

2005 இல் பல நகரங்களில் நடந்த புத்தாண்டு கலவரத்தை தொடர்ந்து இக்காலப்பகுதியில் கார் எரிப்பு என்பது பிரெஞ்சு புறநகர்ப் பகுதிகளில் ஆண்டுதோறும் நடக்கும் நிகழ்வாக மாறியுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க கடந்த புத்தாண்டு கொண்டாட்ட காலப் பகுதியில் சுமார் 32 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள், 95 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இவ்வாறான கடுமையான கட்டுப்பாடுகளையும் மீறி கடந்த 31 ஆம் திகதி இரவு புத்தாண்டு கொண்டாட்டத்தின் போது 874 கார்கள் தீ வைத்து எரிக்கப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுகொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதிகோரி கடையடைப்புப் போராட்டம்



(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் சந்திப் பகுதியில் கடந்த முதலாம் திகதி இரவு கூரிய ஆயுதத்தால் குத்தி படுகொலை செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி கோரி பரந்தன் வர்த்தகர்கள் நேற்று முழு கடையடைப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி பரந்தன் சந்திப் பகுதியில் புத்தாண்டு தினமான முதலாம் திகதி இரவு கூரிய ஆயுதத்தால் குத்தி இளைஞன் ஒருவன் படுகொலை செய்ததோடு மேலுமொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் உயிரிழந்த இளைஞரின் மரணத்துக்கு நீதி வேண்டியும் கொலையுடன் தொடர்புபட்டோரைக் கைது செய்யுமாறும் கோரி பரந்தன் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி கடையடைப்பை முன்னெடுத்தனர். (4-5-315-316)

### மருத்துவக் கழிவுகளைக் கொட்டிய

# மருத்துவமனை உரிமையாளருக்கு 70 ஆயிரம் ரூபாய் அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் உள்ள காணிகளில் மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை கொட்டி எரியூட்டிய மருத்துவமனை உரிமையாளருக்கு எதிராக யாழ்.நீதிமன்று 70 ஆயிரம் ரூபாய் அபராதம் வித்தித்தது.

தண்டப்பணத்தை கட்டத் தவறின் ஒரு மாத சிறைத் தண்டனை என மன்று தீர்ப்பளித்தது. திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்திக்கு அருகில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனை ஒன்று, மருத்துவக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளை, யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அருகில் அமைந்துள்ள தமக்குச் சொந்தமான காணியில் கொட்டி, எரியூட்டிய குற்றச்சாட்டில் மருத்துவமனை உரிமையாளருக்கு எதிராக, யாழ். மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரியினால், யாழ்.நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில், நேற்று திங்கட்கிழமை குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றத்தை மருத்துவமனை உரிமையாளர் ஏற்றுக் கொண்டதனையடுத்து, உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று, 70 ஆயிரம் ரூபாய் தண்டப்பணத்தை விதித்தது. (4-5-18-33)

# கரைச்சி பிரதேச சபையின் கொடி, சின்னம், அறிமுக நிகழ்வு



(முறிகண்டி)

கரைச்சி பிரதேச சபையின் கொடி மற்றும் சின்னம் நேற்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. குறித்த நிகழ்வு கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்றது.

தேசியக் கொடி ஏற்றப்பட்டு உறுப்பினர்கள் உறுதி மொழி எடுக்கும் நிகழ்வினை தொடர்ந்து குறித்த நிகழ்வு ஆரம்பமானது.

தொடர்ந்து கரைச்சி பிரதேச சபையினால் முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட கரைச்சி பிரதேச சபை கொடி தவிசாளர் வேழமாலிகிதனால் ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து கரைச்சி பிரதேச சபைக்கான சின்னம் மறுசீரமைக்கப்பட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. குறித்த சின்னத்தினை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். (4-100-315-316)

# நயினாதீவு-குறிகாட்டுவான் படகுச் சேவை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு- குறிகாட்டுவானுக்கான படகுச் சேவை நேற்றுத் திங்கட்கிழமை முதல் அரச ஊழியர்கள் மற்றும் பயணிகளின் நலன் கருதி புதிய நேர அட்டவணையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, நயினாதீவிலிருந்து காலை 06.30 மணி முதல் ஒவ்வொரு அரை மணித்தியாலத்திற்கும் ஒரு படகுச்சேவை என்ற அடிப்படையில் மாலை 05 மணி வரையும் குறிகாட்டுவானுக்கான படகுச் சேவை இடம்பெறும் என நயினாதீவு தனியார் படகு உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (4-5-18)




# நெல்லியடியில் விபத்து ஒருவர் மருத்துவமனையில்

(கரணவாய்)

நெல்லியடிப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நெல்லியடிப் பேருந்து நிலையத்தில் நின்ற தனியார் பேருந்து நேரக்கணிப்பாளர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது. விபத்தில் படுகாயமடைந்தவர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் இரு சந்தேக நபர்களை நெல்லியடி போக்குவரத்து பொலிஸார் கைது செய்தனர். (4-5-60)

### எதிர்வரும் வாரங்களில்

# பாரிய கொவிட் அலையை நாடு எதிர்கொள்ளும்

## விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் கடந்த வாரம் இடம்பெற்ற கொண்டாட்டங்களில் மக்களின் பொறுப்பற்ற விதத்திலான நடவடிக்கைகளினால் எதிர்வரும் சில வாரங்களில் பாரிய கொவிட் அலையை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்று விசேட மருத்துவ நிபுணர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தடுப்பூசி பெற்றுக் கொள்ளல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்பவற்றின் மூலமாகவே இந்த அபாயத்திலிருந்து மீள முடியும்.

முழுமையாகத் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டுள்ள போதிலும் மேற் கூறப்பட்ட அடிப்படைச் சுகாதார வழி காட்டல்களை பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும். இதன் மூலமே எம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

ஒமிக்ரோன் பிறழ்வானது டெல் டாவை விட வீரியம் குறைவானதாகக் காணப்பட்டாலும் வேகமாகப் பரவும் திறனைக் கொண்டுள்ளது. இதனால் தொற்றாளர்கள் சடுதியாக அதிகரிக்கும் போது மருத்துவமனை கட்டமைப்புக்களும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். மருத்துவமனை ஊழியர்கள் தொற்றுக்குள்ளாகி அவர்கள் தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டால் மருத்துவ சேவையும் மந்தமடையும் என அச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு கொண்டாட்டத்திற்காக

# இலங்கை வந்த வெளிநாட்டவர்கள் கடலில் மூழ்கி உயிரிழப்பு

(கொழும்பு)

புத்தாண்டு கொண்டாடுவதற்காக வெளிநாட்டில் இருந்து இலங்கை வந்த இளைஞர்கள் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி ஹிக்கடுவ, நாரிகம கடற்கரையில் குளிப்பதற்காக சென்ற ரஷ்ய நாட்டவர்கள் இருவரே இவ்வாறு நீரில் மூழ்கி உயிரிந்துள்ளனர்.

33 வயதுடைய குறித்த இளைஞர்கள் இருவரும் தங்கள் காதலிகளுடன் இலங்கை வந்துள்ள நிலையில் ஹிக்கடுவ கடற்கரையில் குளித்துக் கொண்டிருந்தபோது அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதன்போது கரையில் இருந்த காதலிகள் இருவரும், அங்கிருந்த மக்களின் உதவியுடன் அவர்களை காப்பாற்ற முயற்சித்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டு காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

மற்ற இளைஞனின் உடல் மறுநாள் காலை கரையொதுங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## வாழ்வில் இன்பம் சேர்க்கும் ஸ்ரீ ஐயப்பன் விரதம்



தெய்வீக அம்சமும் அழகும் நிறைந்த அந்தக் குழந்தையைக் கண்டு எடுத்து அதற்கு மணிகண்டன் என்று பெயரிட்டு சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார். இந்த நிலையில் ராணி கருவுற்று ராஜராஜன் என்ற மகனை பெற்றெடுத்தார். இரு குழந்தைகளையும் தக்க பருவத்தில் குருகுலத்தில் சேர்த்து கல்வி கற்க செய்தனர்.

தனக்குப் பின்னர் மணிகண்டன் சிறந்த மன்னனாக விளங்குவான் என்று மனமகிழ்ந்த மன்னன் மணிகண்டனுக்கு முடிசூட முடிவு செய்தார். இதை அறிந்த மந்திரி ஒருவர் சதிச்செயலில் இறங்கினார். மகாராணியின் மனதை கெடுத்து மணிகண்டனை அழிக்கத் திட்டமிட்டார். அதன்படி ராணி தலைவலியால் துடிப்பதைப் போல் நடித்தாள். ராணியைக் குணப்படுத்த புலிப்பால் வேண்டுமென்று மருத்துவர் கூறினார்.

புலிப்பாலைக் கொண்டுவர மணிகண்டன் தலையில் இருமுடி தாங்கி காட்டுக்குத்தனியாகப் புறப்பட்டார். வழியில் பெரும் கொள்ளைக்காரனாகிய வாவரைத் திருத்தி நண்பனாக்கினார்.

இந்தக் காட்டில் தேவர்களுக்கு தீராத தொல்லை கொடுத்து வந்த மகிஷி எருமை உருவில் வந்து மணி கண்டனுடன் போரிட்டாள். அவளை மணிகண்டன் வதம் செய்தார். இதனால் சாப விமோசனம் அடைந்த அவள் ஐயப்பனிடம் தன்னை மணந்து கொள்ளும் படி கூறினாள். அவளிடம் தன் பிரம்மச்சரிய விரதத்தையும் தன் அவதார நோக்கத்தையும் எடுத்துக் கூறினார். எப்போது என்னுடைய சபரிமலைச் சந்நிதிக்கு ஒரு கன்னி சாமி கூட வரவில் லையோ, அப்போது நான் உன்னை மணந்து கொள்கிறேன் எனக் கூறினார்.

தனது அருகில் மஞ்சள் மாதாவாக வீற்றிருக்க அருள் புரிந்தார். மகிஷியை அழித்த மணிகண்டனை தேவர்கள் வாழ்த்தி வணங்கினர். பின்னர் தேவர்கள் அனைவரும் புலி வடிவம் தாங்கினர். ஐயப்பன் புலியின் மீது ஏறி நாடு திரும்பினார். ஐயப்பன் தனது அவதார நோக்கத்தினை எடுத்துக் கூறி தனக்கு விடை கொடுக்கும் படி வேண்டினார்.

இதைக் கேட்டதும் ராஜசேகர மன்னர் மனம் உடைந்தார். மணிகண்டனை பிரிய மனமின்றி தன் இராச்சிய எல்லைக்குள் இருந்து என்றும் காட்சி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அதற்கு ஐயப்பன் தான் எய்தும் அம்பு விழும் இடத்தில் பதினெட்டு படிகள் அமைத்து கோவில் அமைக்க வேண்டும் என்றார்.

மேலும் தன்னை காணவரும் பக்தர்கள் ஒரு மண்டலம் விரதம் இருந்து இருமுடி தாங்கி தன் கோவிலுக்கு வர வேண்டுமென்று கூறி மறைந்தார்.

பந்தள மன்னர் ஐயப்பனின் கட்டளைப்படி அவ்விடத்தில் கோவில் அமைத்து கும்பாபிஷேகம் நடத்தினார். பரசுராமர் அங்கு ஐயப்பன் விக்கிரகத்தை பிரதிஸ்டை செய்தார். சபரி என்ற ஜோகியின் நினைவாக அந்த இடம் சபரிமலை என்று அழைக்கப்படுகிறது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## விபத்தை ஏற்படுத்தியதால் வெளிநாட்டு பிரஜை கைது

(அஹங்கம)

மதுபோதையில் வாகனம் செலுத்தி விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் ரஷ்ய பிரஜை ஒருவரை அஹங்கம பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

விபத்தில் இருவர் காயமடைந்துள்ளதுடன், வெளிநாட்டவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (நி-5)

## வீதி விபத்துக்களால் 2,419 பேரை பலியெடுத்த 2021

(கொழும்பு)

கடந்த ஆண்டில் மட்டும் 2,419 பேர் வீதி விபத்துக்களில் பலியா கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் அதற்கு முந்தின வருடம் 2,325 விபத்துக்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வீதி விபத்துக்களினால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 13,469 ஆகவும் அதில் 5,263 பேர் படுகாயமடைந்தவர்களாகவும் 8,206 பேர் சிறு காயமடைந்தவர்களாகவும்உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## பதுளை வாகன விபத்தில் ஒருவர் பலி

### சாரதி கைது

(பதுளை)

லொறியொன்றினால் மோதுண்ட பாதசாரி ஒருவர் ஸ்தலத்திலேயே பலியான சம்பவம் நேற்று முன்தினம் மாலை பதுளையில் இடம்பெற்றுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி கைது செய்யப்பட்ட நிலையில், குறித்த நபரை பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 320 | 300 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 120 | 180 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 950 | 1200 |
| தக்காளி | 200 | 240 | 240 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 60 | 50 |
| கோவா | 300 | 250 | 320 | 400 |
| கரட் | 350 | 460 | 480 | 600 |
| பூசணி | 80 | 70 | 60 | 100 |
| புடோல் | 250 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 80 | 70 | 70 | 100 |
| சின்ன வெங்காயம் | 200 | 180 | 200 | 320 |
| பெரிய வெங்காயம் | 130 | 170 | 140 | 160 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 600 |
| வெண்டிக்காய் | 240 | 160 | 180 | 240 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 160 |
| பயற்றங்காய் | 200 | 350 | 350 | 300 |
| லீக்ஸ் | 340 | 340 | 320 | 400 |
| பீற்றூட் | -- | -- | 200-300 | -- |
| கறிமிளகாய் | 650 | 650 | 150 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | 1000 |
| போஞ்சி | 350 | 220 | 320 | 300 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 50-100 | 80 |
| தேசிக்காய் | 250 | 180 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-60 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 260 | 180 | 200 |
| வெங்காயப்பூ | 450 | 500 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 100 | 160 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 50 | 50 |
| வல்லாரை | 30 | 30 | 10 | 40 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கான நிதி உதவிக்கு இந்தியா பச்சைக்கொடி

(கொழும்பு)

இந்தியாவிடமிருந்து 900 மில்லியன் டொலர் பெறுமதியான நிதி உதவி இம்மாதம் இலங்கைக்கு கிடைக்கும் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையுடனான நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் 400 மில்லியன் டொலரும் எரிபொருளுக்காக 500 மில்லியன் கடனுதவியும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறித்த இரு நிதியுதவித் திட்டங்களில் ஒன்று ஜனவரி 10 ஆம் திகதி கிடைக்கப்பெறும் என உயர்மட்ட தகவல்களை மேற்கோளிட்டு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் உதய கம்மன்பில கடந்த வாரம் இலங்கையும் இந்தியாவும் இணைந்து எண்ணெய் தாங்கிகளை அபிவிருத்தி செய்வதாக அறிவித்திருந்த அதேவேளை லங்கா இந்தியன் எண்ணெய் நிறுவனத்தின் தாங்கிகளின் குத்தகை மேலும் 50 வருடங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ ஜனவரி 10 ஆம் திகதி இந்தியாவிற்கு தனது இரண்டாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாட்டில் ஒமிக்ரோன் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

ஒமிக்ரோன் பரவலால் பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள போதிலும் இலங்கையில் ஒமிக்ரோன் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அன்வர் ஹம்தானி, இலங்கையில் இதுவரை 48 ஒமிக்ரோன் நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ள போதிலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாக தெரிவித்தார்.

கொழும்பு, பதுளை, அநுராதபுரம் மற்றும் புத்தளம் மாவட்டங்கள் போன்ற நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஒமிக்ரோன் நோய்த் தொற்றுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இருப்பினும், ஒமிக்ரோன் நோயாளிகளின் தொடர்புகள் கண்டறியப்பட்டு, அவர்களை தனிமைப்படுத்த ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

# 5.5 மில்லியன் டொலர் உதவி வழங்கிய ரஷ்யா

(கொழும்பு)

உலக உணவுத் திட்டத்தின் ஊடாக சுமார் 5.5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உதவிகளை ரஷ்யா இலங்கைக்கு வழங்கியுள்ளது.

பாடசாலை மட்ட போசாக்கு திட்டங்களுக்காக இந்த உதவித் தொகை பயன்படுத்தப்பட உள்ளது.

இலங்கையில் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறு உதவிகள் வழங்கப்படுவதாக ரஷ்ய தூதரகம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி இந்த நிதி, உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. (நி-5)


# அரிய வகை உயிரினம் பொறியில் சிக்கி காயம்

(கொழும்பு)

கொலன்னாவ கொப்பகந்த பிரதேசத்தில் அரிய வகை வெள்ளை முள்ளம் பன்றி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒருவரின் வீட்டுக்கு அருகாமையில் காணப்பட்ட பொறியொன்றில் சிக்கியிருந்த இந்த முள்ளம்பன்றி தொடர்பில் அவர் உடவலை வனவிலங்கு காரியாலயத்திற்கு அறிவித்தார்.

உடன் விரைந்த அதிகாரிகள் முள்ளம்பன்றியை பாதுகாப்பாக மீட்டு, அதற்கு சிகிச்சை அளித்துள்ளனர்.



இவ்வாறான அல்பினோ முள்ளம் பன்றிகள் மிகவும் அரிதானவை எனவும், பொறியில் சிக்கியதனால் படுகாயமடைந்துள்ளதாகவும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் வனவிலங்கு திணைக்கள அதிகாரி விஜித பெரேரா தெரிவித்துள்ளார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சிதறாத சிந்தனைகள்

ஏதேதோ எண்ணங்கள்; அர்த்தமற்ற சிந்தனைகள்; நியாயமற்ற நினைப்புக்கள்; பயனற்ற பகற்கனவுகள். இவை கலந்த அலைபாயும் உள்ளம் கொண்டவர்கள் ஒருக்காலும் வெற்றியாளர்களாய்த் திகழ முடியாது.

நூற்றுக்கு நூறு எடுத்த செயலைப் பற்றி நினைப்பு; சற்றும் விலகி ஓடாத– விஸ்வரூபம் எடுத்து ஆடாத ஒருமுகப்பட்ட உள்ளம் ஆகியவையே வெற்றியைத் தேடிக் குவிக்க வல்லன.

ஒரு முக்கியமான செயலைச் செய்து கொண்டிருக்கும் போது ஐயோ! அது மறந்துவிட்டதே! என்று ஒரு திடீர் நினைப்பு வந்தால், உடனே ஒரு நாளில் அதைக் குறித்துவிட வேண்டும். அத்தோடு அந்த நினைப்பிலிருந்து விலகி செய்து கொண்டிருக்கும் செயலில் முழு மூச்சுடன் இறங்க வேண்டும். இரு வேறு நினைப்புகள் இரு செயல்களையும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடும் என்பதை உணர்வது நல்ல பயனைத் தரும்.

உள்ளத்தை ஒருமுகப்படுத்தும் கலையில் தெய்வபக்தி உள்ளவர்கள் தலை சிறந்தவர்களாக இருக்கிறார்கள்.

இவர்களால் ஒரே விடயம் தொடர்பான சிந்தனை ஓட்டங்களைச் செலுத்த முடியும் என்பது மட்டுமல்ல, எதையுமே எண்ணாமல் மனதை வெற்றிடமாகக் கூட வைத்திருக்க முடியும். எனவே தெய்வ பக்தி, உள்ளத்தை ஒருமுகப்படுத்தும் கலைக்கும் தலை சிறந்த கருவியாக விளங்குகிறது.

ஓய்வாக இருக்கும்போது ஒரு தலைப்பை எடுத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக மலை என்றே வைத்துக் கொள்வோம். கடிகாரத்தைக் கண்முன் வைத்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து எவ்வளவு நிமிடம் உங்களால் மலை தொடர்பான விடயங்களை மட்டுமே சிந்திக்க முடிகிறது என்று முயன்று பாருங்கள்.

உலகத்தில் உள்ள மலைகள்– திருத்தலங்கள் அமைந்த மலைகள்– மலை தொடர்பாகச் சிறு வயது முதல் உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள்– இப்படி முழுக்க முழுக்க மலை தொடர்பாகச் சிந்தனையைச் செலுத்துங்கள்.

மலை தொடர்பான விடயங்களைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அடிக்கடி நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்புடைய சிந்தனையிலிருந்து விலகும் போதெல்லாம் தோல்வியை ஒப்புக் கொண்டு இடைவெளிவிட்டு மீண்டும் அதேபோன்ற தலைப்பைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பியுங்கள்.

விரலின் நுனி; சுவரில் ஒரு புள்ளி; வானத்தில் ஒரு மேகத்துணுக்கு இவற்றுள் எதையேனும் பார்த்துக் கொண்டே சிந்தனையைச் சிதறவிடாமல் மனத்தை ஒரு நிமிடமேனும் வெற்றிடமாக்குங்கள். பின்னர் அந்த நிமிடங்களை மெல்ல அதிகமாக்குங்கள்.

இப் பயிற்சிகளை முறையாக மேற்கொண்டால் மனத்தை ஒருமுகப்படுத்துவது எளிதான செயலாகிவிடும். இதன் மூலம் அறிவாற்றல் வளரும். ஞாபக சக்தி நிலைக்கும் எடுத்துக் கொண்ட காரியம் கைகூடும். இவற்றைவிட வேறென்ன வேண்டும்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கோபக்கார முனிவர்



ஆனால்அவன், "மாதவனுடைய பெண் மிக அழகானவள். அதனால் தான் அவன் வீட்டுக்கு வழி கேட்கிறாயா? உன்னைப் போன்ற முனிவருக்கு இது தேவையா?" என்று திமிராகக் கேட்டான்.

அவனை ஊமையாக வேண்டும் என்று சுதீவர் சபித்துவிட்டு ஒருவாறு மாதவனின் வீட்டைக் கண்டு பிடித்தார்.

சுதீவரை மாதவன் வரவேற்று அமரச் செய்தார். "என் குருவான சுசாந்தர் தங்களை ஒரு புண்ணியவான் என்றார்.

நீங்கள் அப்படி என்ன தவம் செய்து, என் குருவே புகழும்படி புண்ணியம் சம்பாதித்தீர்கள்?" என்று கேட்டார்.

"காலையில் எழுந்து என் நித்திய கடன்களை முடித்து விட்டு, வீட்டு வேலைகளிலும் வெளி வேலைகளிலும் பங்கேற்கிறேன்.

எல்லோருக்கும் என்னாலான உதவிகளைச் செய்கிறேன். கோபம், பொறாமை, ஆசை இவற்றை விட்டொழித்து மனதினாலும், வாக்கினாலும், உடலினாலும் பலருக்கும் நன்மை புரிகிறேன்!" என்றார் மாதவன்.

பூஜை, புனஸ்காரம், தவம் இவை எதுவுமே செய்யாமல் இவனுக்கு எப்படி புண்ணியம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் சுதீவர், "நீங்கள் கடவுளை தியானம் செய்வது கிடையாதா?" என்றார்.

"கடவுள் என்னிலும் இருக்கிறார். மற்றவர்களிடமும் இருக்கிறார். சகல உயிர்களிலும் உறைகிறார்.

அவரைத் தனியாக பூஜையோ, தியானமோ ஏன் செய்ய வேண்டும்? மற்றவர்களுக்கு உதவி செய்தாலே, அது கடவுளுக்காக செய்யப்படும் பூஜை, தியானம், தவம் அனைத்தும் ஆகும்!" என்றார் மாதவன். சுதீவருக்கு மாதவன் தன்னை ஏளனம் செய்கிறார் எனத் தோன்றியது.

"நீர் நான் செய்யும் தவமெல்லாம் வீண் வேலை என்று பொருட்படக் கூறுகிறீரா?" என்று கோபத்துடன் சுதீவர் கேட்டார்.

"சுவாமி! நான் உங்களைப் பற்றியோ, உங்கள் தவத்தைப் பற்றியோ குறை கூறவில்லை. நான் என்னுடைய கருத்தைக் கூறுகிறேன்!" என்றார் மாதவன் பணிவுடன்.

கோபத்துடன் குதித்து எழுந்தார் சுதீவர். "உன்னைப் போன்ற நாஸ்திகனை மன்னிக்கவே கூடாது. இந்த நிமிடத்திலிருந்து நீ கண்பார்வை இழந்து நடக்க முடியாமல் படுக்கையில் வீழ்வாய்!" என்று சாபமிட்டார்.

ஆனால், மாதவனுக்கு ஒன்றுமே ஆகவில்லை. மீண்டும் மாதவன் பணிவுடன், "சுவாமி! சாந்தம் அடையுங்கள். உங்களைப் போன்ற மகான் கோபம் அடையும்படி நான் பேசியது தவறுதான்!" என்று மன்னிப்புக் கேட்டார். "மாதவா! என் சாபம் உனக்குப் பலிக்கவில்லை. நீ என்ன மகாத்மாவா?" என்றார் சுதீவர். (தொடரும்)

# மகாபாரதம்




ஆனால் அவர் எப்படி அவனிடமிருந்து அவளைக் காத்தார் என்னும் விபரத்தைக் கூறவில்லை. பத்தினி பாதுகாப்பாய் இருந்த செய்தி அறிந்த தேவசர்மா மகிழ்ந்தார்.

விபுலரைப் பாராட்டி, வேண்டும் வரத்தைக் கேட்குமாறு கூறினார். விபுலரும், தருமத்தினின்றும் தவறாமல் இருக்கும் வரத்தைக் கேட்டுப் பெற்றார்.

குருவிடம்வரம்பெற்ற விபுலர் தவம் மேற்கொள்ள காடு சென்றார். கடும் தவஞ் செய் தார். தவம் ஈடேறியது. மகிழ்ச்சியுடன் எங்கும் சென்று வரலானார்.

ஒரு நாள் ஒரு தெய்வ நங்கை தேவசர்மாவின் ஆசிரமத்திற்கு மேலே ஆகாயத்தில் சென்று கொண்டிருந்தாள். அப்போது அவள் சூடியிருந்த மண மலர் ஒன்று ஆசிரமத்தின் அருகில் விழுந்தது.

அப்படியொரு மலர் தன் சகோதரிக்கு வேண்டும் எனக் குருபத்தினி தேவசர்மாவிடம் தெரிவித்தாள். அத்தகைய மலரைத் தேடிக்கொண்டு வரும்படி தன் சீடரான விபுலருக்குக் கட்டளையிட்டார்.

குருவின் [illegible] ளையை ஏற்று விபுலர் காட்டிற்குச் சென்று கஷ்டப்பட்டு அரிதான மணம் மிக்க அம்மலரைப் பெற்றார்.

அதை எடுத்துக்கொண்டு ஆசிரமத்திற்குத் திரும்புகையில் வழியில் இருவர் சக்கரம் போல தங்கள் கைகளைப் பற்றிக்கொண்டு சுற்றிச்சுற்றி விளையாடிக் கொண்டிருந்தனர்.

அப்படி விளையாடு [illegible] டனர். விளை யாட்டில் தோற்பவருக்குப் பொய் சொன்ன விபுலர் பெற இருக்கும் நரக கதிதான் கிடைக்கும் என்று சபதம் ஏற்றனர். இதைக் கேட்டு விபுலர் நடுங்கினார் மனம் சோர்ந்தார்.

பின்னர்.. அதைவிட பேரதிர்ச்சி தரும் காட்சியைக் கண்டார். ஆறு பேர் சூதாடிக் கொண்டிருந்தனர்.

"நம்மில் பேராசை கொண்டு பொய் சொல்பவர் அந்த விபுலர் போக இருக்கும் நரகத்தையே சென்றடைவர்" என்று கூறிக் கொண்டு சூதாடினர். விபுலர், இது கேட்டு தீயால் சுடுவது போல துயரம்அடைந்தார்.

"நான் செய்த தவறு என்ன?" என்று பலவாறு ஆராய்ந்து பார்த்தார். ஒரு வேளை "குரு பத்தினியைக் காக்கும் முயற்சியில் அவள் கண்ணோடு தன் கண்ணை இணைத்துப் பார்வையால் சக்தியை அவள் உடலில் செலுத்தி அவளைக் காப்பாற்றியதை குருவிடம் சொல்லாமல் மறைத்தது காரணமாக இருக்குமோ?" என எண்ணினார்.

இத்தகைய மனக் குழப்பத்துடன் ஆசிரமம் சென்று குருவிடம் மலரைக் கொடுத்து வணங்கினார்.

பின்னர்,தான் கண்ட காட்சிகளை குருவிடம் கூறினார். மனப் புழுக்கத்தைக் கூறினார். "அந்த இருவரும் யாவர்? "மற்ற அறுவரும் யாவர்? நான் என்ன பிழை செய்தேன்? ஏன் அவர்கள் அப்படி சபித்தார்கள்? தயவு செய்து விளக்க வேண்டும் " என்றார்.

"சீடனே! உன் குழப்பத்தை நான் அறி வேன். நீ செய்த குற்றம் ஒன்றே ஒன்றுதான். என் பத்தினியை நீ எவ்வாறு காப்பாற்றினாய் என்ற உண்மையை மறைத்து விட்டாய்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நன்மை கூறிய விதுரன் திருதராட்டிரனால் துரத்தப்பட்டார். இது மூர்க்கர்களுக்கு உபதேசிப்பவர் தீங்கு அடைவர் என்பதை தெரிவிக்கிறது.
>
> – வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தன்னை எதிர்த்த தேரர்களை வாலாயப்படுத்திய ஜனாதிபதி

அரசியலில் எந்நேரமும் பிரளயம் நடக்கலாம் என்பதை அறுதியிட்டுக் கூறமுடியும்.

இதற்குப் பல உதாரணங்களைக் காட்டலாம். அதில் ஒன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பௌத்த பீடங்களுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட நெருக்கமான உறவைக் குறிப்பிடமுடியும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில் முதலில் அதிருப்தி கொண்டவர் கள் பௌத்த பீடங்களும் பௌத்த தேரர் களும் என்பது தெரிந்த விடயம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டுமென முருத்தெட்வே ஆனந்த தேரர் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தினார்.

அதற்கு மேலாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கடுமையான வார்த்தைகளால் திட்டித் தீர்த்தார்.

தவிர, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கியதன் மூலம் நாம் பெரும் தவறு செய்துவிட்டோம் என்றும் பௌத்த துறவியான ஆனந்த தேரர் கூறியிருந்தார்.

பௌத்த பிக்குகளின் எதிர்ப்பு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை இக்கட்டான சூழ் நிலைக்குத் தள்ளியது.

பௌத்த பீடங்களின் எதிர்ப்புக்கு ஆட்சித் தலைவர் ஆளாகுவாராயின், அவரின் ஆட்சி கவிழ்வது தவிர்க்க முடியாதது என்பது இலங்கை வரலாற்றில் நிஜமான விடயம்.

அந்த வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பௌத்த பிக்குகள் கடுமையாக எதிர்க்க, இனி கோட்டாபயவின் ஆட்சிக்கு மாரகம் ஏற்பட்டுவிட்டதென அரசியல் ஆய்வாளர்கள் பலரும் கணித்திருந்தனர்.

ஆனால் நடந்தது வேறாயிற்று. பௌத்த பீடங்கள் அதிரடியாக மனம் மாறின.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு உயரிய பத்ம விபூஷண விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்ஷ பதவி விலகக்கூடாது என ஆனந்த தேரர் அறிக்கையிட்டார்.

ஓ! காலம் மாறிவிட்டது. ஜனாதிபதியை எதிர்த்து நின்ற பௌத்த பீடங்கள் கோட்டாபயவை ஆதரிக்கத் தயாராகிவிட்டன.

இந்த அதிரடி மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதுதான் இங்கு ஆராயப்பட வேண்டிய ஆச்சரியம்.

ஆம், ஞானசார தேரர் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆனந்த தேரர் கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வேந்தராக நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதியின் இந்த வாலாயத்தில் பௌத்த துறவிகள் தம் உள்ளத் துறவை இழந்தனர். பதவி ஆசை அவர்களைப் பற்றிக் கொண்டது.

இந்த நிலையில் பேரினவாதத்தை கையிலெடுத்தனர். தமிழர்களை எதிர்ப்பதாயின் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்க வேண்டும் எனப் பரப்புரை செய்தனர். அதற்கேற்ப பத்ம விபூஷண விருதும் வழங்கினர்.

இனி நாடு விலைப்பட்டாலும் ஆட்சிக்கு ஆபத்தில்லை. மாரகத்திற்கு மகா அபிஷேகம் செய்தாயிற்று.

## மாடுகளுக்கு குறி சுடுதலுக்கு எதிராக சைவ மகா சபை வழக்கு தாக்கல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவ மகா சபையால் பசுக்களுக்கு குறி சுடுதல், நலமடித்தல் போன்ற செயற்பாடுகளை தடுத்து நிறுத்தும் வகையிலும் வடக்கு மாகாணத்தில் முதன்முறையாக ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் மாட்டுக்கு குறி சுட்டவர் மீது கடந்த மாதம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாக சைவ மகா சபையின் பொதுச் செயலாளர் பரா. நந்தகுமார் தெரிவித்தார்.

நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த பத்து வருடங்களாக அன்பே சிவம் உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம் என்ற தொனிப் பொருளில் பசுவதைக்கு எதிராகவும் எருது மாடுகளுக்கு குறி சுடுவதை நிறுத்துமாறு சைவ மகா சபை பல வழிகளிலும் முயற்சித்து வந்தது.

மாடுகளுக்கு குறி சுடுதல் நலமடித்தல், பெயர் எழுதுதல் மற்றும் இரும்பு கம்பிகளை சூடாக்கி இலக்கங்களைப் பொறித்தல் ஆகியவற்றிற்கு எதிராக விழிப்புணர்வுப் பிரசாரங்கள், துண்டுப் பிரசுரங்கள் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டும் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை.

இந் நிலையில் கடந்த மாதம் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் குறிசுட்டு பசுவை இரத்த காயத்திற்குள்ளாகிய நிலையில் குறித்த மாட்டின் உரிமையாளருக்கு எதிராக சைவ மகா சபையின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி பரா. நந்தகுமாரால் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கின் மூன்றாம் தவணையான நேற்று வழக்கு விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த சந்தேக நபரை 50 ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல ஊர்காவற்துறை நீதவான் அனுமதியளித்த வழக்கு தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளது.

முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீ. சிவஸ்கந்தஸ்ரீ மன்றில் முன்னிலையாகி இருந்தார். (ம)

## பேருந்து கட்டணம் நாளை முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

அரச மற்றும் தனியார் பேருந்து கட்டணங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள 17.44 சதவீத கட்டண அதிகரிப்பு நாளை முதல் நடை முறைப்படுத்தப்படும்.

அதன்படி புதிய கட்டண திருத்தத்திற்கமைய குறைந்தபட்ச கட்டணம் 3 ரூபாவினாலும் அதிகூடிய கட்டணம் 194 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தை தொடர்ந்து தனியார் பேருந்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என அகில இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினர் போக்குவரத்து அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைய கடந்த ஜனவரி மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட பேருந்து கட்டண அதிகரிப்பு கடந்த மாதம் 29 ஆம் திகதி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டது. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் கிருஷ்ணா மெடி கிளினிக், கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், குருக்களூர் மன்னார் வீதி, மேலும் 2 மணியிலிருந்து 5 மணிவரை கார்கில்ஸ் பூட் சிற்றி, தேக்கவத்தை (கண்டிவீதி), (கற்குளி) கண்டி வீதி, வவுனியா 2 ஆவது குறுக்குவீதிச் சந்தி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஒமிக்ரோன் தொற்றாளர் பேருவளையில் அடையாளம்

(கொழும்பு)

பேருவளை பிரதேசத்தில் ஒமிக்ரோன் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டுள்ளதாக பேருவளை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இரத்தினக்கல் தொழில்துறையுடன் தொடர்புடைய குறித்த நபர் வேலை நிமித்தம் வெளிநாடு செல்லவிருந்த நிலையில் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுத்துள்ளார்.

இதன்போது அவருக்கு தொற்றுறுதி ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து அவரது மாதிரி கோவிட் பரம்பரை அலகுகளை இனங்காண்பதற்கான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையிலேயே அவருக்கு ஒமிக்ரோன் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த நபருடன் நேரடி தொடர்புகளைப் பேணியவர்கள் இனங்காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இவர்கள் ஊடாக ஏனைய பகுதிகளுக்கு வைரஸ் பரவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார். (ம)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### மனதை விரிவுபடுத்து

- ❖ கைம்மாறு கருதாமல் பிறருக்குக் கொடுத்து மகிழுங்கள். அதுவே உண்மையான இன்பம்.
- ❖ பார்க்கும் இடமெல்லாம் கடவுள் நிறைந்திருக்கிறார். எல்லாப் பொருட்களிலும் பரம்பொருளைக் காண்பதே பேரின்பம்.
- ❖ தியாக மனப்பான்மை ஒரு மனிதனை மரணமில்லாப் பேரின்ப நிலைக்கு அழைத்துச் செல்லும்.
- ❖ குறிக்கோளுக்குச் செலுத்தும் முக்கியத்துவத்தை அதை அடைய மேற்கொள்ளும் பாதைக்கும் செலுத்துவது அவசியம்.
- ❖ சிலநேரங்களில் இன்பத்தைவிடத் துன்பமே மனிதனுக்கு சிறந்த ஆசிரியராக அமைந்து விடுகிறது.
- ❖ உலகம் எவ்வளவு பெரிதோ அந்தளவுக்கு உங்கள் மனதையும் விரிவுபடுத்துங்கள்.
- ❖ தன்னைச் சரிப்படுத்திக் கொள்பவன் உலகைச் சரிப்படுத்தும் தகுதியைப் பெறுகிறான்.
- ❖ நல்ல மனிதனை உருவாக்குவதில் இன்பமும் துன்பமும் சரிசமமான இடத்தை வகிக்கின்றன.
- ❖ மனத்தூய்மை மிக்கவர்கள் இந்த பிறவியிலேயே கடவுளைக் காணும் பேறு பெறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஊரெழு பலாலி வீதியில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் ஊரெழு பொக்கணை வீதியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்டு உள்ளது.**

(9383)

தொடர்பு

**077 658 5999**


# இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருட்டு; இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் இராணுவ மற்றும் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் இராணுவப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இராணுவ பொலிஸாரினால் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

டிசெம்பர் 9ஆம் திகதிக்கும் 23 ஆம் திகதிக்கும் இடையே தெல்லிப்பழை மற்றும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுகளில் உள்ள இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் திருடப்பட்டன.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங்களில் உள்ள இந்து ஆலயங்களில் திருடப்பட்ட விக்கிரகங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் காங்கேசன்துறை நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் முதலில் கைது செய்யப்பட்டார்.

இந்த நிலையில் கொழும்புக்கு விரைந்த உப பொலிஸ் பரிசோதகர் நிதர்சன் தலைமையிலான குழுவினர் அங்கு வர்த்தகர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட மேலும் 20இற்கு மேற்பட்ட விக்கிரகங்களை மீட்டனர்.

அவற்றை கொள்வனவு செய்த வர்த்தகர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவற்றில் பல இராணுவ மற்றும் கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களின் இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையோரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டனர்.

சம்பவம் தொடர்பில் இராணுவ பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் 42 வயதுடைய இராணுவச் சிப்பாய் கைது செய்யப்பட்டு தெல்லிப்பழை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-33)





**திரு. K.யோகநாதன்**

( கோட்டக்கல்விப் பணிப்பாளர் - கரவெட்டி )

சேவை விபரம்

| | |
|---|---|
| யா/ செம்பியன்பற்று RTMS | 17.08.1988 - 07.07.1994 |
| யா/செம்பியன்பற்று GTMS | 08.07.1994 - 31.01.1997 |
| யா/செம்பியன்பற்று GTMS - பதில் அதிபர் | 01.02.1997 - 18.02.1999 |
| யா/நாகர்கோவில் AMTS - பதில் அதிபர் | 19.02.1999 - 31.01.2001 |
| யா/குடத்தனை GTMS - அதிபர் | 01.02.2001 - 16.07.2007 |
| யா/தும்பளை சிவப்பிரகாச ம.வி - அதிபர் | 17.07.2007 - 31.12.2015 |
| கோட்டக்கல்விப் பணிப்பாளர் - கரவெட்டி | 01.01.2016 - 03.01.2022 |

வாழ்த்துவோர்:
வலயக்கல்வி அலுவலக ஊழியர் நலன்புரிச் சங்கம்
வடமராட்சி

(C-3409)


# அத்தியாவசிய, மருந்துபொருட்களின் சகல வரிகளும் நீக்கம் - அமைச்சர் பசில்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்களுக்கான சகல வரியும் நீக்கப்படுவதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அத்துடன், பெருந்தோட்ட துறை சார் குடும்பங்களுக்கு மாதாந்தம் ஒரு கிலோ கிராம் கோதுமை மா 80 ரூபா என்ற அடிப்படையில் 40 ரூபா நிவாரணத்துடன் 15 கிலோகிராம் வழங்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

ஓய்வூதியம் பெறுவோர் மற்றும் விசேட தேவையுடைய பாதுகாப்புப் படையினர் ஆகியோருக்கு இந்த மாதம் முதல் 5,000 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும் 20 பேர்ச்சுக்கும் குறைவான விவசாய நிலங்களைக் கொண்டுள்ள விவசாயிகளுக்கு 5000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பவற்றுடன் கலந்துரையாடப்படுவதாகவும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்துள்ளார். (ம)


## மரண அறிவித்தல்



**திரு. அன்னலிங்கம் தெய்வீகலிங்கம்**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. அன்னலிங்கம் தெய்வீகலிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் *(02.01.2022)* ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற அன்னலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் சிரேஷ்ட புதல்வன் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 12, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :-
அன்னலிங்கம் தெய்வீகலிங்கத்தின்
குடும்பத்தினரும் உறவினரும்

(C-3405)






இலங்கை வங்கியின் கொடிகாமம் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவித்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் இலங்கை வங்கியின் வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் திருமதி சுஜதா நேதானந்தன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் அருகில் கொடிகாமம் கிளை முகாமையாளர் த.கபிலனையும் படங்களில் காணலாம்.


# NOTICE

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**
**OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)**
**WORLD BANK FUNDED ACCELARATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION**

**WALK-IN -INTERVIEW**

**POST OF RESEARCH ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01 VACANCY**

Walk - in - Interview for the Post of Research Assistant (Full Time)- On Contract Basis Will be held on 11.01.2022 from 9.00 AM to 12.00 Noon at Seminar Hall, Staff Development Center, University of Jaffna. Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates on the date and the time mentioned above.

**Please refer the University of Jaffna website www.jfn.ac.lk for further details.**

Registrar

(C-3408)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

அதன்படி, நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,037 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## காஸ் அடுப்பு...

வெடித்துச் சிதறியுள்ளது.

வவுனியா, வைரவபுளியங்குளம், புகையிரத வீதி, மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் பெண் ஒருவர் சமைத்துக் கொண்டிருந்தபோது நேற்று மதியம் திடீரென காஸ் அடுப்பு வெடித்துள்ளது.

இதனையடுத்து குறித்த பெண் காஸ் சிலிண்டரை பாதுகாப்பாக அகற்றி மேலதிக அனர்த்தம் ஏற்படுவதை தடுத்துள்ளார். (ம-250)

## நெல்லியடியில்...

வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் நாகராசா (வயது- 63) என்பவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் எதிரெதிரே வந்து மோதி விபத்துக்குள்ளாகின.

இதில் மோதி விபத்துக்குள்ளான இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கடமையிலிருந்த தனியார் சிற்றூர்தி நேரக் கணிப்பாளரை மோதித்தள்ளியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் அவர் உயிரிழந்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-60)

*(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே)*

## விபரீத முடிவெ...

ணொருவர் விபரீத முடிவெடுத்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த பெண் கணவனை விட்டு பிரிந்த நிலையில் சில காலமாக வாழ்க்கை நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் நேற்றுக் காலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான 26 வயதுடைய குடும்பப் பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-104)

## மேலதிக கொடுப்...

தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரச ஊழியர்களுக்கு 5,000 ரூபாய் மேலதிக கொடுப்பனவை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## அடையாள...

யுவதிகளுக்கும் இலத்திரனியல் அடையாள அட்டை நேற்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பிளொக்செயின் (Blockchain) எனப்படும் தொழினுட்பத்தைப் பயன்படுத்தி இந்த அடையாள அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது.

குறித்த இலத்திரனியல் அடையாள அட்டைகளைத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் தமித்த விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது இளைஞர்களின் கல்வி, தொழில் சார் தகுதிகள் மற்றும் ஏனைய தகுதிகளுக்கான தகுதிகளை உள்ளடக்கிய வகையில், அவர்களின் தகவல்களை சேமித்து வைக்கும் வங்கி என்ற விதத்தில் இந்த அடையாள அட்டை விநியோகிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## மலேரியா...

இவருக்கு பிளாஸ்மோடியம் பல்சிபரம் என்ற மூளை மலேரியாவினை ஏற்படுத்தும் கிருமித் தொற்று இனங்காணப்பட்டுள்ளது என யாழ்.போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த நபர் தென்னாபிரிக்காவில் இருந்து அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தவர். கடந்த ஒரு மாதத்தில் யாழ்.போதனா வைத்தியசாலையில் இனங்காணப்பட்ட மூன்றாவது மலேரியா நோயாளி இவராவார்.

எனவே யாழ்ப்பாணப் பிரதேசத்தில் மலேரியா நோய் நுளம்பின் மூலம் பரவலைத் த[illegible] களை இ[illegible] மான கடமையாகும் என்றார். (ம-33)

## தனியாரின்...

தொழிற்சங்கங்கள் முன்வைத்த குறித்த யோசனை தொடர்பாக தொழிற்சங்கங்கள் மற்றும் முதலாளிமார்களுடன் அமைச்சு தற்போது கலந்துரையாடி வருவதாக அவர் கூறினார்.

நேற்று தொழிலாளர் அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

மேலும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான காப்புறுதி வழங்கல் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொழிலாளர்களுக்கான சட்ட கட்டமைப்புகள் நவீன காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார். (ம)

## அமைச்சரவை...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று நாங்கள்வேண்டாம்எனக்கூறிய போது, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற அரசியல் கட்சிகள் தவறுதலாக சட்டத்திற்கு ஆதரவாக கைகளை உயர்த்தின.

மாகாண சபை சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமாயின் பல புதிய திருத்தங்களை உள்ளடக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

அந்த சட்ட மூலம் தவறான முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டமூலத்தின்படி முற்றாக நீக்க வேண்டும். தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றது. புதிய சட்டமூலம் உருவாக்கப்பட்ட பின்னர் தேர்தலை நடத்துவோம் என தெரிவித்துள்ளார்.(ம)

## சமூ...

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை இலங்கை வைத்தியசாலையில் ஒமிக்ரோன் மாறு[illegible]ான [illegible]ளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் கொரோனாத் திரிபாக மாற்றம் அடையும் என்றும் எச்சரித்தார்.

எனினும் சுகாதார வழிகாட்டுதல்களை பொதுமக்கள் அவசியம் பின்பற்ற வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் நதீக ஜனகே கேட்டுக்கொண்டார். (ம)

## தமிழ் பேசும்...

பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம் ஹரீஸ் நேற்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

முஸ்லிம் தரப்பிற்கு 1987ஆம் ஆண்டு கூட இலங்கை - இந்திய ஒப்பந்தம் சரியாக காட்டப்படாது அவ்வொப்பந்தம் செய்யப்பட்டது.

13ஆவது சீர்திருத்த சட்டமூலத்தை தலைவர் அஷ்ரப் உட்பட கிழக்கு மாகாண முஸ்லிம்களும் முழுமையாக எதிர்த்த ஒரு சட்ட மூலமாகும்.

தற்போதைய ஒப்பந்த நகலும் வடகிழக்கில் பிறந்த எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்கூட பார்வைக்காக வழங்கப்படவில்லை என்றார். (ம)

---

**வாசனா சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம் 1681 திகதி 2022.01.03
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 05 26 46 72

**தன நிதானய**
திகதி - 2022.01.03
சீட்டிழுப்பு இலக்கம் - 666
P 01 23 56 69

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 03.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2931
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 06 22 31 33

**மஹஜன சம்பத**
திகதி 2022/01/03
சீட்டிழுப்பு இலக்கம் 4636
ஆங்கில எழுத்து D — வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 3 1 3 9 3

**சுபிரி வாசனா**
சீட்டிழுப்பு திகதி 2022/01/03 — சீட்டிழுப்பு இலக்கம் 1656
சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 17 20 35 36

**மெகா பவர்**
திகதி 03/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 0984
வெற்றி எழுத்து V — சுப்பர் இலக்கம் 22 — வெற்றி இலக்கங்கள் 08 42 73 77

**அத கோடிபதி**
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1439
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 03.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,619,620
வெற்றி இலக்கங்கள் 20 36 58 73 — ஆங்கில எழுத்து K
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**சனிதா**
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3774
வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 03.01.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,129,180
வெற்றி இலக்கங்கள் 14 42 50 68 — ஆங்கில எழுத்து Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

**ஜயோதா Jayoda**
சீட்டிழுப்பு வாரம் 1799 — சீட்டிழுப்பு திகதி 03.01.2022
வெற்றி இலக்கங்கள் 13 29 38 46 — ஆங்கில எழுத்து V
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 29,625,140/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

**12 அதிர்ஷ்ட**
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 32 11 54 67 69 (சுப்பர் இலக்கம் 32)
சீட்டிழுப்பு வாரம் 789 — வர்ணம் இள நீலம் — திகதி 2022.01.03 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 201,051,967/-
தொலைபேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

**ராசி**
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,411,934/=
திகதி 03.01.2022 — வெற்றி வாரம் 3325 — வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 29 39 59 62 — விருச்சிகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,268,800/=

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1613 — நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 03.01.2022 — தினம் திங்கள்
O 21 41 51 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 52,726,038/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

கொக்குவில் கஜன் மண்டபத்திற்கு அருகாமையில் இயங்கிவந்த ஆட்டிறைச்சிக் கடையை உரிமையாளர் நல்லையா உதயகுமார் (பெரியதம்பி) 2022.01.01 அன்று கொக்குவில் சந்தைக்கு இடம் மாற்றியுள்ளார் என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றார்.



தொடர்புகளுக்கு
077 085 6479

(9323)

## கணக்கீடு

தொடர் கருத்தரங்கு

S.தவா

ஆரம்பம் : நாளை 2 P.m (05.01.2022)
கட்டணம் : 1000 ரூபா
காலம் : 30 மணித்தியாலங்கள்
வெளிமாணவர்களும் பங்குபற்றலாம்.

DCM - யாழ்.நகர்
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை)
-077 239 5858

(9380)

## தவறவிடப்பட்டுள்ளது

பருத்தித்துறையில் இருந்து வரணி, மிருசுவில் பாதையில் Pendrive(கறுப்பு) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். 077 959 6844

(C-3405)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தங்கி நின்று வயோதிபரை பராமரிக்கக் கூடியவர்கள் நேரில் வரவும்.
இல.51, அம்மன் வீதி, நல்லூர்.
077 773 3368

(9308)

## வேலை வாய்ப்பு

சிறுநகைத்தொழில் உற்பத்தி பொருட்களை விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ள ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.(யாழ்ப்பாணம்)
077 623 7956

## மணமகள் தேவை

| | |
|---|---|
| பிறப்பு | : 1989 R.C |
| நட்சத்திரம் | : அனுசம் |
| தகைமை | : அரச வேலை (Hospital) |
| எதிர்பார்ப்பு | : அரச ஊழியர் OR நிரந்தர கம்பனி வேலை |

தொடர்பு
076 020 5469

(9378)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## ராஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: ராஜ் - 077 679 6623

(9381)

"INNOVATIVE IDEAS OPEN NEW WORLD"

## TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பப்பிரிவு

### இறுதிச் செயலமர்வு - 2021

(Techno World இனால் நடாத்தப்படும் மாபெரும் இறுதிக் கருத்தரங்கு)

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

06,07,08,09 and, 10 JANUARY 2022

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

ஆசிரியர்கள்
ராகவன்(B.sc)
முகுகுறோயன்(B.sc)
நிரோஜன்(B.sc)
உமாகாந்தன்(BIT)

" காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை "
அனைத்து மாணவர்களும் பங்கு பெறலாம்

இடம் - வெலிங்டன் சந்தி அருகாமை, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு.... 0770175346

(C-3410)

## வேலை வாய்ப்பு

எமது WEC நிறுவனம் அலுவலக ரீதியான வேலை வாய்ப்பினை வழங்கவுள்ளது.

வாய்ப்பினை வழங்க எதிர்பார்ப்போர்
- Lock down இல் வேலையை இழந்தோர்.
- நிரந்தர வேலை வாய்ப்பினை எதிர்பார்ப்போர்.
- 10 - O/L, A/L படித்து விட்டு நிறுவனத்தில் வேலை செய்ய எதிர்பார்ப்போர்.

- தகுதிகாண் காலத்தின்போது 15,200/= - 38,700/= வரையும் தகுதிகாண் கால முடிவின் பின்னர் 45,000/= பெற முடியும்.
- Over Income, Bonus, EPF, ETF, வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

எதிர்பார்ப்பவர்கள் நேர்முகத் தேர்வினூடாக தெரிவு செய்யப்படுவர். ஆர்வம் உள்ளவர்கள் 077 985 8580 எனும் இலக்கத்திற்கு தங்களது தே.அ.அட்டை இலக்கம் மற்றும் முகவரி, முழுப்பெயர், பிறந்த ஆண்டு, திகதி என்பவற்றை SMS செய்யவும்.

076 940 4151|077 384 7988|021 722 3317

(9369)

யாழ். நகரின் No. 1 கல்வி நிறுவனம்

## O/L DAY CLASS

(துரித மீட்டல் வகுப்புக்கள்)

ஆரம்பம் : 05.01.2022
புதன் காலை 8.00மணி

- யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழாம்
- முக்கிய பாடங்களுக்கான Paper class
- MON → FRI - மு.ப. 8.00 - 2.00 மணி வரை
- அனுமதிகள் இன்று முதல்

(C-3406)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்
-077 459 8440

## ICOF - வளர்பிறை உளவளத்துணை நிலையம்

Since- 1994 | Reg.No J/DS/SS/NGO/31

நரம்பு மொழியியல் நிகழ்வு உளவளச் சிகிச்சை முதலாம் பிரிவினருக்கான பயிற்சி நெறியும், ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் ஆறாம் பிரிவினருக்கான பயிற்சி நெறியும்

**Neuro Linguistic Programme (NLP), Personality Growth & Co- Counsellor's Training**

வளர்பிறை உளவளத்துணை நிலையத்தின் புலமைவாய்ந்த வளவாளர்களினால் 08.01.2022 அன்று எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01.நரம்பு மொழியியல் நிகழ்வு உளவளச்சிகிச்சை பயிற்சி நெறி. பயிற்சிக் காலம் :- 50 மணித்தியாலங்கள்

02.ஆளுமை மேம்பாடு மற்றும் சம ஆற்றுப்படுத்துனர்களை உருவாக்கும் பயிற்சி நெறி. பயிற்சிக் காலம் :-100 மணித்தியாலங்கள்

- பிரதி சனி,ஞாயிறு (9.00am - 1.00pm)
- பயிற்சியின் பின்னர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கப்படும்.
- கல்வித் தகைமை :- உளசமூகத்துறையில் ஆர்வம் உள்ளோர்.
- விண்ணப்ப முடிவு திகதி :07.01.2022
- தகுதியானவர்கள் தமது பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- அனுமதிக் கட்டணம்:- 1000.00ரூபாய்

(9373)

077 266 0209
021 222 8238

வளர்பிறை உளவளத்துணை நிலையம் (ICOF)
இல. 05, பிளச்சஸ் லேன், சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- பருத்தித்துறை
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

0768226240 DHL

(C-3381)

## வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்

கனடா/UK/சிங்கப்பூர்/மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர்-சிறுவர்-நோயாளர் பராமரிப்பு) COOK/HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்

ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள்



IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
0777-068-777

(C-3382) R1

# மரண அறிவித்தல்

## கனகரத்தினம் ஸ்ரீறங்கா (றங்கன்)

( மண்டைதீவு - 01 )



தோற்றம் : 16.02.1959
மறைவு : 03.01.2022

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 48, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் ஸ்ரீறங்கா (றங்கன்) நேற்று (03.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் கணேஸ், சிவசிறி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அமுதவதனி, சிதம்பரராணி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ரேணுகா - திபாகர் (லண்டன்), விஜிகரன், நேருஜினி - சசீலன் (லண்டன்), சிரஞ்சிகா (லண்டன்), லக்சிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.01.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 48, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 077 837 0847

தகவல் :- குடும்பத்தினர்

(9379)



## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## கனகசபை இலங்கநாதன்

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17.04.1940 | 04.01.2018 |

நான்காண்டு காலம் உருண்டு மறைந்தாலும்
உம் உயிர்மூச்சு மறைவதில்லை!
ஓராயிரம் யுகங்கள் ஓடி ஒழிந்தாலும்
உம் நினைவுகள் ஒழிவதில்லை!

" நண்பர்கள் கேணி மற்றும்
" அறம் செய் இறைப்பு

(9377)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.